

# இது விசுவாசத்தின் மறைபொருள்

**கிறிஸ்து மரித்தார்**





**கிறிஸ்து மீண்டும் வருவார்**



# கிறிஸ்து உயிர்த்தார்


இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

ஈஸ்ரர் சிறப்பிதழ்

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 222 2378 Fax: 021 222 9041, ISSN 1391-7633

மலர் : 139 இதழ் : 06 பக்கங்கள் : 16 திகதி : 05.04.2015 விலை : 40.00




## எமது நம்பிக்கை வாழ்வை உறுதிப்படுத்தும் பாஸ்காக் கொண்டாட்டங்கள்

### யாழ். ஆயரின் வாழ்த்துச் செய்தி

இறைவன் எமது நம்பிக்கை வாழ்வைத் திடப்படுத்தி நாம் புத்துயிர் பெற்றவர்களாய் முன்னோக்கிச் செல்லத் துணையாகத்தான் ஒவ்வொரு வருடமும் ஈஸ்டர் விழாவை நாம் கொண்டாட அருள்கூர்ந்துள்ளார் இவ்விழாவின் முக்கிய நாட்களாகிய பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பாஸ்காத் திருவிழிப்பு, உயிர்ப்பு ஞாயிறு ஆகிய நாட்களில் நாம் பங்கு கொள்கின்ற திருவழிபாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் எமது நம்பிக்கை வாழ்வை உறுதிப்படுத்தி நமக்குப் புதுத் தெம்பைத் தருவனவாகவே அமைந்துள்ளன. இவ்வகையில்தான் இந்தவருடமும் நாம் அனுசரிக்கின்ற பாஸ்காக் கொண்டாட்டங்கள் எமது வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற சலிப்புத்தன்மைகள், வேதனைகள், இடர்கள் அனைத்ததையும் நாம் துணிவோடு எதிர்கொள்ள எமக்குப் புதிய உந்து சக்தியாக அமைகின்றன. இக்காலத்தில் பிறரின் துயரங்களைக் கண்டு பாராமல் இராமல் ஒருவர் பாரத்தை மற்றவர் சுமக்கும் தாராளமனதை இறைவன் தருவாராக. ஆண்டவர் எப்போதும் எம்முடனேயே இருப்பார். அவர் உயிருள்ள இறைவன். எம்மை ஒருபோதும் கைவிடார் என்ற நம்பிக்கையோடு மகிழ்ச்சியாக வாழ்வோம். உயிருள்ள இயேசு உங்களை ஆசீர் வதிப்பாராக!

பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை



## முன் அறிவித்தபடியே வல்லமையோடு உயிர்த்தெழுந்தார். அல்லேலூயா! அல்லேலூயா!

மூன்றாம் நாளதனில் முன் அறிவித்தபடியே
எல்லாம் வல்ல பிதாவின் மகன்
வல்லமையோடுயிர்த்தெழுந்து
ஓடியே ஒளிந்திருந்த சீடரின் துயர் போக்கி
உலகெலாம் போய் உண்மையை பரப்புவீர்
வெகுதுன்பம் தருவர் வெகுண்டுமே ஓடாதீர்
என்நிமித்தம் இறுதிவரை நிலைநிற்போன் பாக்கியவான்
என்றுமே நாற்பதுநாட்கள் நல்லறிவு அவர்க்கேற்றி
நாற்பதாம் நாளதனில் வானத்துள் மறைந்து சென்றார்
மீண்டும் அவர் வரவுக்காய்
காத்திருப்போம் நம்பிக்கையில்.

[illegible] அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறிஸ்து தருகின்ற அமைதி வார்த்தைகளால் வடிக்க முடியாதது

### யாழ். மறைமாவட்டக் குருமுதல்வரின் வாழ்த்துச் செய்தி

இறைவன் கிறிஸ்து உயிர்த்தெழுந்து இன்றும் நம்மோடு வாழ்கிறார் என்ற உண்மையை உள்வாங்கி விசுவசிக்கிற எவருக்கும் இவ்வுலக வாழ்வு நிறைவுள்ள ஒரு வாழ்வாகவே இருக்கும். நாளாந்த வாழ்வில் அவர்கள் பல சோதனைகளை, வேதனைகளை அனுபவிக்கக் கூடும். ஆனால், அவர்களின் உள்ளார்ந்தத்தில் ஒரு இனம் தெரியாத அமைதி எப்பொழுதும் குடிகொண்டிருக்கும். அது எப்படியான அமைதி என்பதை அவர்களால் மற்றவர்களுக்கு வார்த்தைகளால் எடுத்துச்சொல்ல முடியாது. "நான் தருகின்ற அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல" என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளின் அர்த்தமும் இதுவேதான். இந்த உலகம் தரமுடியாத அமைதியை அனுபவிக்க உயிர்த்தெழுந்த கிறிஸ்து உங்கள் ஒவ்வொருவருக்கும் அருள்தரவேண்டுமென்று இந்நன்னாளிலே அன்போடு வாழ்த்துகிறேன்.

அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள்

## ஏமது ஏண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

### என்றும் புதிதான, புனிதமான கல்லறைகள்

இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற பின்னணியில் எமது கல்லறைகள் பற்றிய இரண்டு சிந்தனைகளை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

முதலாவதாக, உயிர்த்தெழுந்த இறைவன் கிறிஸ்து மூன்று நாட்கள் துயில்கொண்ட புனிதமான இடம் கல்லறை. எம்முடைய விசுவாச வாழ்வினது மிக முக்கியமான இடமும் அதுவே. நாம் எல்லாரும் உயிர்த்தெழுந்து முடிவில்லா வாழ்வுக்குப் பிரவேசிக்குமுன் எமது கல்லறைகளைக் கடந்தே ஆகவேண்டும். எனவே, இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த, புனிதமான, அர்த்தம் நிறைந்தவையாகக் கல்லறைகள் இருக்கின்றபோது, எமது முன்னோர் துயில்கொள்ளும் கல்லறைகள், அவை அமைந்துள்ள சேமக்காலைகள் கல்லறைகளின் இப்பண்புகளைப் பிரதிபலிக்கின்றனவா என்ற கேள்வி எழுவது துர்ப்பாக்கியமானதே.

இன்று பல கல்லறைகள், சேமக்காலைகள் கால்நடைகளின் இருப்பிடங்களாக, களைகளும் பற்றைகளும் சுதந்திரமாக வளரும் பற்றைக் காடுகளாக, மனிதர் தம் இயற்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கழிவிடங்களாக, குடிகாரர், போதைவஸ்து அடிமைகள், விபச்சாரர்களின் களியாட்டக் கூடங்களாகக் காட்சிதருகின்ற நிலையானது மிகுந்த கவலைக்குரியது என்பது மிகவும் தெளிவு. வருடத்தில் ஒருமுறை, குறிப்பாக நவம்பர் மாத இறந்தவர்களின் திருநாளுக்காக சில சேமக்காலைகளின் சில பகுதிகள் சுத்திகரிக்கப்படுவதும், அதுவும், மிக சொற்பப் பேரைத் தவிர, ஏனையோர் மிகுந்த பலவந்தத்தின் நிமித்தம் இதனைச் செய்வதோடு திருப்தியடைவதுமே தற்போது பெரும்பாலான சேமக்காலைகளின் நிலையாகவுள்ளது.

இயேசுவினுடைய உயிர்ப்பின் அர்த்தத்தின் ஆழத்தை நன்குணர்ந்தாலொழிய, சேமக்காலைகள் எப்படியாக இருந்தால்தான் என்ன என்ற கேள்வி அர்த்தமுள்ளதாகத்தான் தெரியும். மேலத்தேய நாடுகளின் சில சேமக்காலைகளுக்குச் செல்கிறபோது மோட்சவீட்டுக்குப் போவதுபோன்ற உணர்வுகள் ஏற்படுவதை இங்கு குறிப்படாமலிருக்க முடியாது. கல்லறைகளைத்தவிர, கட்டப்படுகின்ற ஏனைய கட்டடங்கள் எல்லாமே நாட்கள், வருடங்கள் போகப்போக பழமையானவையாக மாறிக் கொண்டிருக்கும். ஆனால் மீண்டும் புதிதாக உயிர்த்தெழும் உடல்களைத் தம் கருவறையில் தாங்கியிருக்கும் கல்லறைகள் எப்போதும் புதிதானவையே. இதனால்தான், வருடம் முழுவதும் கல்லறைகள் புதிதாக, புனிதமாகப் பேணப்படவேண்டும். எளிமையான கல்லறைகள் அர்த்தமுள்ளவை. சேமக்காலைகள் என்றும் புனிதமாகப் பேணப்பட செலவு செய்யப்படும் பணத்தைப் போல வேறு எவ்வகையிலும் பலனுள்ள, அர்த்தமுள்ள விதத்தில் பணத்தைச் செலவழிக்க முடியாது என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

இரண்டாவதாக, எமது நாட்டில் ஏற்பட்டுள்ள ஒரு அபாக்கியமான விடயம் பற்றிக் கூற விரும்புகிறேன். அதென்னவென்றால், நீண்ட காலமான பயங்கர யுத்தத்திலே அகப்பட்டு இறந்த ஏராளமான எண்ணிக்கையான இறைமக்களுக்கு இன்று எங்குமே கல்லறைகள் இல்லை. (இவர்கள் எப்படியான நிலையிலிருந்து இறந்தவர்களாயினும் எல்லாரையும் இறைமக்கள் என்றுதான் அழைக்க விரும்புகிறேன். உண்மையும் அதுதான்.) கிறிஸ்து பாடுபட்டு, மரித்து, உயிர்த்தெழுந்தது இவர்களுக்காகவுமே. இவர்களை நினைவுகூர, இவர்களின் உறவுகள் இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு ஒளி ஏற்றி மன்றாட ஒரு இடம் இல்லை. எனவே, எமது மறைமாவட்டத்தின் எல்லா ஊர்களிலுமுள்ள சேமக்காலைகளில் இவர்களுக்காக ஒரு பொதுவான கல்லறை ஒன்று அமைக்கப்படவேண்டும். அந்தந்த ஊர்களிலுள்ள இந்தக் கல்லறைகளில்லா ஆன்மாக்களின் உறவுகளும் ஏனையவர்களும் நவம்பர் 2ம் திகதியோ, அல்லது ஏனைய நாட்களிலோ இந்தக்கல்லறைகளைத் தரிசித்து இவர்களுக்காகச் செபிக்க இவை உதவியாயிருக்குமல்லவா?

இவற்றைக் கூறுகின்றபோது என் மனதில் எழுகின்ற ஒரு எச்சரிக்கையையும் குறிப்பிட விரும்புகிறேன். இயேசுவின் உயிர்ப்பினால் புனிதமாக்கப்பட்டவைகளே கல்லறைகள். அவை எமக்கு உயிர்ப்பின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் இடங்களாக, ஏற்கனவே இறந்தவர்கள் உயிர்த்தெழ எமது செபங்களைக் காணிக்கையாக்கும் இடங்களாகப் பேணப்படவேண்டும். நான் குறிப்பிடும் பொதுவான கல்லறைகளும் முற்றும் முழுதாக இந்த நோக்கங்களையே கொண்டவை. வேறு நோக்கங்களுக்காக இவைகள் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படுதல் நன்று.

அருட்பணி. ப.யோ. ஜெபரட்ணம்



## திருத்தந்தையின் போதனைகளிலிருந்து...

### நேப்பிள்ஸ் விஜயத்தின்போது...

**மக்களை நோக்கி :** நீங்கள் எல்லாரும் இயேசுவைக் காணவேண்டும். வரலாற்றில் பெரும் எண்ணிக்கையானோர் இயேசுவை அறிந்திருந்தார்களேயொழிய அவரைச் சந்திக்கவில்லை. நீங்களும் அவர்களில் ஒருவராக மாறக் கூடாது.

**குருமட மாணவர்களை நோக்கி:** கிறிஸ்து உங்கள் வாழ்வின் மையமாக இல்லை என்று நீங்கள் கண்டால், அவரை உங்கள் வாழ்வின் மையமாக்கும் வரை நீங்களாகவே உங்கள் குருப்பட்டத்தைப் பின்போடுங்கள்.

**குருக்களை நோக்கி:** பணத்தின்மீது பேராசையுடைய, வியாபாரம் செய்கின்ற குருக்கள் திருச்சபைக்குப் பெரும் இடறலாக இருக்கிறார்கள். இறைபணி புரிவதற்கான சுதந்திரமே அப்படிப்பட்ட குருவிடம் இருக்காது.

**துறவிகளை நோக்கி:** துறவிகளின் பெரிய பலவீனமாகிய ஆவலாதி, அவதூறு பேசுவதிலிருந்து விடுபடுங்கள். புறம்பேசுதல் ஒரு பயங்கரவாதச் செயலாகும். அது தூரத்தில் நின்றுகொண்டு வெடிகுண்டை எறிவது போன்றது. அடுத்தவரை கண்முண்ணாலேயே அழிக்கும் செயல்.

### இன்றைய சமூகத்துக்கு நல்ல ஆசிரியர்கள் தேவை

தான் ஆசிரியராக பணியாற்றிய வகுப்பறை நினைவுகளைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கல்விப்பணி ஓர் அழகான பணி, ஆசிரியர்கள் மாணவருக்கு ஆன்மீகப் பெற்றோர் போன்றவர்கள், குறிப்பாக, ஆசிரியரின் பொறுமையை அடிக்கடிச் சோதிக்கும் மிகவும் இன்னல் தரக்கூடிய மாணவருக்கு, ஆன்மீகப் பெற்றோர் போன்றவர்கள் என்று எடுத்துச் சொன்னார்.

எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்வோரைக் கண்டுபிடிப்பதற்குக் கடினமாக இருக்கும் ஒரு சமூகத்தில், இளையோருக்குப் பள்ளிகளில் இத்தகைய எடுத்துக்காட்டுகள் தேவைப்படுகின்றன என்றும் கூறிய திருத்தந்தை, பள்ளிக்கும், கல்விக்கும், கலாசாரத்துக்கும் அர்த்தம் கொடுக்கக் கூடியவர்களாய் ஆசிரியர்கள் இருந்தால் அவர்கள் பணியாற்றும் பள்ளிகள் இளையோரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் என்றும் கூறினார்.

### இறையன்பிலிருந்து நம்மை எதுவும், சிறையின் கம்பிகள்கூட நம்மைப் பிரிக்க முடியாது

இறையன்பிலிருந்து நம்மை எதுவும், சிறையின் கம்பிகள்கூட நம்மைப் பிரிக்க முடியாது, ஆனால், பாவம் மட்டுமே நம்மை இறைவனிடமிருந்து பிரிக்கும் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தென் இத்தாலியின் நேப்பிள்ஸ் நகருக்கு ஒருநாள் திருத்தூதுப் பயணத்தை அண்மையில் மேற்கொண்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், Giuseppe Salvia என்ற சிறையில் கைதிகளைச் சந்தித்தபோது இவ் வாறு கூறினார்.

பல கைதிகளுடன் மதிய உணவை அருந்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் நம் பாவத்தை ஏற்று, உண்மையாகவே மனம் வருந்தி அதை அறிவித்தால் பாவம் கடவுளைச் சந்திக்கும் இடமாக மாறும் என்றும் கூறினார்.

உலகின் சிறைகளில் கைதிகள் பல நேரங்களில் மனிதமற்ற நிலைகளில் வைக்கப்படுவதைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, தண்டனைக் காலம் முடிந்து மீண்டும் அவர்கள் சமூகத்தோடு ஒன்றிணைவதற்கு உதவி செய்யும் தலைவர்கள், மற்றும் மேய்ப்புப் பணியாளர்கள் தங்களின் இப்பணியைத் தொடர்ந்து ஆற்றுமாறும் கேட்டுக்கொண்டார்.

அன்பு, மனிதரை எப்போதும் மாற்றும் சக்தி கொண்டது, மனிதர் ஓரங்கட்டப்படும் இடங்கள், சிறைகள் போன்றவை முழு மனித சமுதாயத்துக்கும் தூண்டுதல் தருவதாய் அமையக்கூடும் என்றும் கூறினார் திருத்தந்தை.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் இறைப்பிரசன்னத்தில் வாழுமாறும், நமது எதிர்காலம் கடவுளின் கரங்களில் உள்ளது, பல கடும் பிரச்சனைகள் மத்தியில் இறைவனின் அளவற்ற கருணையில் நம்பிக்கை வைத்து வாழுமாறும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### "உன்னை நானும் தீர்ப்பிடேன்" திருத்தந்தைக்குப் பிடித்த வார்த்தைகள்

இரக்கம் இல்லாத இடத்தில் நீதியும் இருக்க முடியாது என்று திருத்தந்தை கூறினார்.

விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை, இயேசுவின் முன் பரிசேயர்கள் கொணர்ந்த நிகழ்வை எடுத்துரைக்கும் நற்செய்தியையொட்டி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அப்பெண்ணின் மீது குற்றம் சுமத்தியவர்கள் புனிதர்கள் அல்ல, அவர்களும் பாவிகள், மற்றும், வெளிவேடக்காரர்கள் என்று கூறினார்.

இத்தகைய இரட்டை வாழ்க்கை வாழ்பவர்கள், சமுதாயத்திலும், திருஅவையிலும் உள்ளனர் மனது களங்கப்பட்டிருக்கும் போது, இரக்கத்தைப் புரிந்துகொள்ளும் நிலை பறிக்கப்படுகிறது என்று மேலும் கூறினார் திருத்தந்தை.

விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை நோக்கி இயேசு கூறிய "உன்னை யாரும் தீர்ப்பிடவில்லையா? நானும் தீர்ப்பிடேன்" என்ற வார்த்தைகள், தனக்கு விவிலியத்தில் பிடித்த முக்கியமான உரையாடல்களில் ஒன்று என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவை, இரக்கத்தால் நிறைந்து வழியும் வார்த்தைகள் என்பதாலேயே தனக்கு மிகவும் பிடித்த வரிகள் என்று கூறினார்.

### மண்ணில் புதைக்கப்படும் விதையாகிக் கனி தாருங்கள்

இறைவன் மற்றும் அயலார் மீது கொண்ட அன்பிற்காக இயேசுவைப்போல் தங்கள் வாழ்வையே இழக்கத் தயாராக இருக்கும் கிறிஸ்தவர்கள், மண்ணில் புதையும் விதையாகி மிகுந்த கனிதருபவர்களாக மாறலாம் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மனுமகன் உயர்த்தப்பட வேண்டும் என இயேசு கூறியது, சிலு[illegible]வையில் உயர்த்தப்படுவதை யும், உயிர்த்தெழுதலின்போது தந்தையால் உயர்த்தப்படுவதையும் குறிக்கின்றது என உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவின் இறப்பு, புதிய வாழ்வின் ஆதாரமாக இருந்து, இறை அன்பின் வல்லமையை மீண்டும் மீண்டும் உருவாக்குவதாக உள்ளது எனவும் கூறினார்.

இயேசுவைப் பற்றி அறிந்துள்ள வேளையில், இன்னும் ஆழமாகத் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு நாம் வழங்கவல்லவை, நற்செய்தி, சிலுவை மற்றும் நம் சாட்சிய வாழ்வு எனவும் திருத்தந்தை கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

ஈஸ்ரர் சிறப்பிதழ்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 139 இதழ் : 06 பக்கங்கள் : 16 திகதி : 05.04.2015 விலை : 40.00

## கடவுளின் வழிகளை ஏற்றுக்கொள்வதற்குப் புனித வாரம் நமக்கு உதவுவதாக

### - திருத்தந்தை பிரான்சிஸ் -

கடவுளின் அன்பைக் குறை சொல்லாமலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கு அனைத்துக் கிறிஸ்தவர்களும் அழைக்கப்படுகின்றனர் என்றும் கடவுளின் வழிகளை ஏற்றுக்கொள்வதற்குப் புனித வாரம் நமக்கு உதவுவதாக என்றும் திருத்தந்தை கூறினார்.



அவர் மேலும் கூறுகையில் பாலைவனப் பயணத்தில் இஸ்ரயேலருக்கு வழங்கப்பட்ட உணவை அம்மக்கள் வெறுத்துப் பேசியது பற்றி விளக்கமளித்து கடவுள், ஆயிரக்கணக்கான பல்வேறு வழிகளில் நமக்கு மீட்பை வழங்குகிறார், ஆனால், கடவுளின் வழிகளை ஏற்றுக்கொள்வதற்கு நாம் அடிக்கடி திறனற்றவர்களாக உள்ளோம் என்றும் கூறினார்.

கடவுள் கொள்ளிவாய்ப் பாம்புகளை அனுப்பி இந்த இஸ்ரயேல் மக்களைத் தண்டித்தார். அவர்களில் பலர் இறந்தனர். ஆயினும், மோசே மக்களுக்காக மன்றாடினார். கடவுளின் ஆணைப்படி வெண்கலத்தில் கொள்ளிவாய்ப் பாம்பு ஒன்றைச் செய்து உயர்த்தினார். பாம்புக் கடிக்குப் பின்னர் அதைப் பார்த்தவர்கள் பிழைத்துக்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## உலகியல் மாயைகளைக் களைந்து விட்டு கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வேண்டும்

### பாண்டியந்தாழ்வு பங்கின் உறுதிபூசுதல் நிகழ்வில் யாழ். ஆயர்

கடந்த மார்ச் மாதம் 5ம் திகதி பாண்டியந்தாழ்வு, அரியாலைப் பங்கைச் சேர்ந்த 45 மாணவர்களுக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. திருப்பலியின் முன் புதிதாக புனரமைக்கப்பட்ட போட்டிக்கோ ஆயர் அவர்களால் ஆசீர்வதிக்கப் பட்டது.

திருப்பலியின்போது ஆயர் தனது மறையுரையில் தூய ஆவியின் செயற்பாடுகள் கிறிஸ்துவில் துலங்கியது போல் தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரும் மனத் துணிவுடன் உலகியல் மாயைகளைக் களைந்து விட்டு கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வேண்டும். உறுதிப் பூசுதல் அருட்சாதனத்தில் நாம் அழியாத ஆவியின்



முத்திரையைப் பெற்றுக் கொள்கின்றோம் என்று கூறினார்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

### இஸ்லாமிய தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட

## 21 இளைஞர்களும் வேதசாட்சிகளாக அங்கீகரிப்பு



லிபியாவின் கொப்ரிக் கிறிஸ்தவ திருச்சபை அண்மையில் ISIS தீவிரவாதிகளால் கழுத்து வெட்டப்பட்டுக் கொல்லப்பட்ட 21 இளைஞர்களையும் வேதசாட்சிகளாக அங்கீகரித்து புனிதர்களின் கூட்டத்தில் இணைத்துள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் இந்த இளைஞர்கள் தம் விசுவாசத்தைப் புறக்கணியாமல் இயேசுவின் பெயரை அறிக்கையிட்டவாறு வேதசாட்சிகளாகவே இறந்தார்கள் என்று கூறி இதனை ஆமோதித்துள்ளார். கொப்ரிக் கிறிஸ்தவ திருச்சபை திருத்தந்தையின் ஆளுகைக்குட்பட்ட கத்தோலிக்க திருச்சபையைச் சார்ந்ததல்ல. ஆதித் திருச்சபையில் இயேசுவால் அனுப்பப்பட்ட திருத்தூதர்களின் படிப்பினையைக் கேட்டு மனம் திரும்பி கிறிஸ்தவர்களாக வந்தவர்களின் சந்ததியினரே இவர்கள். பிதாப்பிதாக்கள் என அழைக்கப்படும் இத்திருச்சபையின் தலைவர்கள் கத்தோலிக்க திருச்சபையோடு மிகவும் நெருங்கிய உறவோடு இருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருத்தந்தையின் கை பட்டவுடன் திரவமாக மாறிய புனிதரின் உறைந்த இரத்தம்



திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரத்துக்குச் சென்றபோது அங்குள்ள பேராலயத்தில் திருப்பண்டமாக வைக்கப்பட்டிருக்கும் புனித. ஜனுவாரிஸ் என்பவருடைய உறைந்த இரத்தம் திரவமாக மாறிய அற்புதம் நடந்தது. இப்படியான நிகழ்வு வழமையாக புனிதருடைய திருநாளாகிய செப்டம்பர் மாதம் 19ம் திகதி நிகழ்வதுண்டு. ஆனால் ஒரு திருத்தந்தையின் விஜயத்தின்போது இவ் அற்புதம் நிகழ்ந்தது இது முதல்தடவையாகும்.

பீடத்தில் வைக்கப்பட்டிருந்த புனிதருடைய உறைந்த இரத்தம் அடங்கிய திருப்பண்டத்தை திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்து முத்தமிட்டபோது அது திரவமாக மாறிய அற்புதத்தை அவதானித்த கருதி

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## எந்த ஒரு குற்றமும் ஒருபோதும் மரண தண்டனைக்குத் தகுதியானதல்ல - திருத்தந்தை

வாழ்வு, குறிப்பாக, மனித வாழ்வு கடவுளுக்கு மட்டுமே உரியது என்றும், மரண தண்டனை நிறைவேற்றுவது மனிதப் பண்புக்கும், இறை இரக்கத்துக்கும் முரணானது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மரண தண்டனைக்கு எதிரான அனைத்துலக குழுவின் தலைவருக்கு இஸ்பானியத்தில் இவ்வெளியன்று ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக அளவில் மரண தண்டனை நிறுத்தப்படுவதற்கு ஓய்வின்றி உழைக்கும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை கொடூரமானது, மனிதமற்றது மற்றும் மனித வாழ்வின் மாண்பை அவமதிப்பது என்றும், எந்த ஒரு குற்றமும் ஒரு போதும் மரண தண்டனைக்குத் தகுதியானதல்ல என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

இவ்வெள்ளியன்று வத்திக்கானில் தான் சந்தித்த இந்த அனைத்துலக குழுவின் உறுப்பினர்கள் வழியாக இக்கடிதத்தை வழங்கியுள்ள திருத்தந்தை, ஒரு மனிதரைக் கொலை செய்வதன்மூலம் நீதியை ஒருபோதும் நிலைநாட்ட முடியாது, மாறாக, பழிவாங்குதலை ஊக்குவிக்கின்றது என்றும், மரண தண்டனை நிறைவேற்றுவது மனிதமற்ற செயல் என்றும் கூறியுள்ளார்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

### பிரமாண்டமான

## உலக இரட்சகர் சிலை

### மணற்காட்டில் சுனாமி ஞாபகார்த்தம்

மணற்காட்டுப் பங்கில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் போது உயிர்நீத்தோர் ஞாபகார்த்தமாக 26 அடி உயரமான கிறிஸ்து இரட்சகர் நினைவு முற்றம் பங்குனி மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி ஜெ.எல்மோ அடிகளாரின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வானது பங்கில் பணியாற்றும் அருட்சகோதரி நெவிஸ் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டது. அருட்தந்தையர்கள், அரச அதிகாரிகள், ஏராளமான

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

### நெடுந்தீவுப் பங்கில் மரியாயின் சேனையின் பொன்விழா

## இறைவனின் மாபெரும் ஆசீர்வாதத்தின் வெளிப்பாடு

- இயக்குநர் அருட்பணி ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகள் -

நெடுந்தீவுப் பங்கின் **"வாக்குத்தத்தின் பெட்டி மாதா"** பிரசீடியத்தின் 50ம் ஆண்டு பொன்விழா 15.02.2015 அன்று ஞாயிறு காலை 6:30 மணித் திருப்பலியுடன் வெகு சிறப்பாக நடந்தேறியது. பங்குத்தந்தை அருட்பணி செ. நேசன் அடிகளாரின் வழிநடத்துதலின் கீழ் சேனையர் அனைவரும் அணிதிரண்டு பக்தியுடன் விழாப்பலியில் இணைந்து வழிபாட்டைச் சிறப்பித்தனர்.

அன்றைய விழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனை ஆன்ம இயக்குநர் அருட்பணி ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தலைமையில் நெடுந்தீவுப் பங்குத்தந்தையும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி நிக்சன் கொலின் அடிகளாரும் சேர்ந்து கூட்டுப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். ஆன்மீக இயக்குனர் தமது மறையுரையில் சேனையினரின் பணிகளைப் பாராட்டியதோடு இன்னும் பலர் இணைந்து சேனையைப்பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் யுவதிகளின் துவிச்சக்கர வண்டிச் சிலுவைப்பாதை



பருத்தித்துறை, சக்கோட்டை ஆகிய பங்குகளின் இளைஞர்களும் யுவதிகளும் சிலுவைகளைத் தாங்கிய வண்ணம் இயேசுவின் பாடுகளைத் தியானித்தவாறு துவிச்சக்கர வண்டிகளில் பவனியாக தத்தம் பங்குகளில் உள்ள ஆலயங்களைத் தரிசித்து தவக்கால பக்தி முயற்சியை மேற்கொண்டார்கள். பருத்தித்துறையில் புனித தோமையார் ஆலயத்தில் தொடங்கிய பவனி, தும்பளை மரியன்னை ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் வழியாக மீண்டும் புனித தோமையார் ஆலயத்தில் நிறைவுபெற்றது. இதேவேளை, சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திலிருந்து புறப்பட்ட பவனி, உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலயம், வட்டுக்கோட்டை செபஸ்தியார் ஆலயம் வழியாக மீண்டும் சக்கோட்டையை வந்தடைந்தது. அருட்பணியாளர்கள் J.J. மௌலிஸ், T.நிருபன் நிஷாந்த் ஆகியோரின் வழிநடத்தலில் இடம்பெற்ற இப்பவனிகளில் பருத்தித்துறை மறைக்கோட்டத்தைச் சேர்ந்த ஏனைய பல குருக்கள் துறவிகளும் கலந்து சிறப்பித்தார்கள்.

## உலகின் முக்கிய நான்கு திருத்தலங்களில் செபமாலைப் பக்தி முயற்சி

மரியன்னையின் புகழ்பெற்ற திருத்தலங்களில், உலகின் முக்கிய நான்கு திருத்தலங்களில் இச்செவ்வாய் மாலை செபமாலைப் பக்தி முயற்சியும், திருப்பலியும் மேற்கொள்ளப்பட்டன.

உரோம் நகர் புனித மேரி மேஜர் பசிலிக்காப் பேராலயம், மற்றும், லூர்து நகர், பாத்திமா நகர், குவாதலுபே நகர் மரியன்னை திருத்தல ஆலயங்கள் நான்கும் சேர்ந்து இந்த முயற்சியில் ஈடுபட்டன.

திருத்தந்தை புனித 2ம்யோவான் பவுல் அவர்கள் எழுதிய "Evangelium Vitae", அதாவது, 'வாழ்வின் நற்செய்தி' என்ற சுற்றுமடலின் 20ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முயற்சியாக, குடும்பங்கள் திருப்பீட அவை இந்த முயற்சியை மேற்கொண்டது.

திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இயேசுவின் வாழ்க்கை மறையுண்மைகளை மையப்படுத்தி சொல்லப்பட்ட செபமாலையைத் தொடர்ந்து, திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது.

உரோம் நகர் புனித மேரி மேஜர் பசிலிக்காப் பேராலயத்தில் குடும்பங்கள் திருப்பீட அவையின் தலைவர், பேராயர் Vincenzo Paglia அவர்கள் முன்னின்று நடத்திய இந்த பக்தி முயற்சியும், திருப்பலியும் Telepace என்ற இத்தாலிய தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

## வசாவிளானில் மீள் குடியேற்றம்



வசாவிளானில் சிலபகுதிகளில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அச்சுவேலிப் பங்குத்தந்தை அருட்பணி. அன்ரனி பாலா அடிகளார் செபமாலைத் தாசர்சபைக் குருக்களோடும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களோடும் சென்று அங்குள்ள இடங்களைப் பார்வையிட்டார். பாழடைந்த நிலையில் உள்ள வசாவிளான் புனித சந்தியோகுமையோர் ஆலயத்தையும் அவர் பார்வையிட்டார்.

## T.C.N.L வழங்கும் மின்னஞ்சல் சேவை ஆரம்பமாகியுள்ளது

யாழ் மறைமாவட்டத்தில் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரின் கீழ் இயங்கும் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா செய்திச் சேவை (T.C.N.L) யினால் குருக்களுக்கென பிரத்தியேகமாக நடாத்தப்படும் மின்னஞ்சல் சேவை தனது முதலாவது மின்னஞ்சலை குரு வாடிக்கையாளர்களுக்கு கடந்த மார்ச் மாதம் 26ம் திகதி அனுப்பிவைத்துள்ளது. பரிசுத்த வார கையேட்டின் முதல் பகுதியாக குருத்து ஞாயிறு வழிபாடுகள் பற்றிய அனைத்து விடயங்களும் தமிழில் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இங்கு முன்னுரை, வழிபாட்டுச் செபங்கள், வாசகங்கள், பதிலுரைப் பாடல்கள், திருப்பாடுகளின் நற்செய்தி (மூவர் வாசிப்பது) போன்ற அனைத்து விடயங்களும் தரப்பட்டு மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது. வழமையாக ஒவ்வொரு புதன் இரவும் இம் மின்னஞ்சல் சேவை வாடிக்கையாளர்களை வந்தடையும் எனவும், விஷேட விடயங்கள், செய்திகள் அவ்வப்போது வெளியிடப்படும் எனவும், இச்சேவையைப் பெற விரும்பும் குருக்கள் தொடர்பு கொள்ளுமாறும் இச்சேவைக்குப் பொறுப்பான அருட்பணி. ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் கேட்டுக் கொள்கிறார்.

## மக்கள் பார்வைக்கு புனிதத்துணி

இயேசுவின் அடக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்ட புனிதத்துணி இத்தாலியின் தூரின் நகரிலுள்ள பேராலயத்தில் இருப்பது நாம் அறிந்ததே. இப்புனிதத்துணி மக்களின் பார்வைக்காக வருகிற ஏப்ரல் 19ம் திகதியிலிருந்து ஜூன் 24ம் திகதி வரை வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருத்தந்தை புனித வியாழனன்று சிறைக்கைதிகளைச் சந்திப்பார்

ஏப்ரல் 2, புனித வியாழனன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் நகரில் உள்ள Rebbibia சிறையில் உள்ள கைதிகளைச் சந்திப்பார் என்றும், மாலை 5.30 மணிக்கு, அங்குள்ள கோவிலில் ஆண்டவரின் இறுதி இரவுணவுத் திருப்பலியை ஆற்றும் வேளையில், சிறைபட்டிருக்கும் பெண் கைதிகள் சிலரின் காலடிகளைக் கழுவுவார் என்றும் திருப்பீடம் அறிவித்துள்ளது.

## பேராயர் ரொமேரோ மே 23ல் அருளாளர் ஆகிறார்

எல் சல்வடோர் நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல்கொடுத்து, திருப்பலி வேளையில் சுட்டுக் கொல்லப்பட்ட பேராயர் ரொமேரோ எதிர் வரும் மே மாதம் 23ம் திகதி அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படுவாரென வத்திக்கான் அறிவித்துள்ளது.

## கொழும்பு இறைதியானக் குழுவினரின் தியானங்களும் குணமாக்கல் ஆராதனைகளும்

கொழும்பு உயிர்த்த ஆண்டவர் சமூகத்தைச் சேர்ந்த சகோ. லலித் பெரேராவும் குழுவினரும் வருகிற மே மாதம் 1ம் 2ம் 3ம் திகதிகளில் யாழ். மறைமாவட்டத்தில் இறைவார்த்தைத் தியானங்களையும் குணமாக்கல் ஆராதனைகளையும் நடாத்த இருக்கின்றார்கள். இவைபற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.


### மடுத்திருப்பதியில் மாபெரும் திருவிழிப்பு ஆராதனை

இதேவேளை எதிர்வரும் மே மாதம் 30ம் திகதி சனிக்கிழமை இரவு மடுத் திருப்பதியில் இவர்களால் மாபெரும் திருவிழிப்பு அபிஷேக ஆராதனையும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படவிருக்கின்ற இத் திருவிழிப்பு நற்செய்தி மாநாட்டில் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான இறைமக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எமது யாழ் மறைமாவட்டத்திலிருந்தும் இறைமக்கள் இந்த விஷேட திருவிழிப்பு அபிஷேக ஆராதனை நிகழ்வில் பங்கெடுப்பதற்கான ஒழுங்குகளை யாழ். மறைமாவட்ட இறைத் தியானக் குழுவினர் மேற்கொள்வார்கள்.

## சிலுவையின் அதிர்வுகள்

### உரும்பிராய் பங்கில் யேசுவின் திருப்பாடுகள்

- ஒரு விமர்சனம் -



உரும்பிராய், புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் 22.03.2015 அன்று, இயேசு மீட்பரின் திருப்பாடுகள் குறித்த 'சிலுவையின் அதிர்வுகள்' எனும் தவக்கால நிகழ்வு பங்குத்தளத்தை சார்ந்தவர்கள், பங்குத் தந்தை அருட் திரு நிக்ஷன் அடிகளார் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

நாடகப்பாணிதனில் இடம்பெற்ற காட்சிகளில், சிந்தனைக்குரிய எண்ணக்கருக்கள் தாராளமாக பொதிந்திருந்தது சிறப்பம்சமாகும். காட்சிகளுடன் இணைந்தவாறு இசைவான தியானங்கள், தெளிவான முறையில் தரப்பட்டிருந்தன. யேசுவின் பாடுகளில் புதைந்துள்ள மீட்பின் மறை உண்மைகள், பக்தி புனைந்த உணர்வுரீதியாக வெளிக்கொணரப்பட்டன. மக்கள் மனதில் பதியத்தக்கதாக உருக்கமான முறையில் உள்ளத்தை கவருவனவாக இருந்தன. சென்றகால கிராமிய பக்தி பாரம்பரிய முறை இந்நிகழ்வில் இவ்விதமாக கையாளப்பட்டமை பயன் விளைவித்தது.

பங்கேற்ற நாடகர் குழு, கனகச்சிதமாகச் செயற்பட்டமை, கண்ணுக்கு விருந்தாக அமைந்திருந்தது. கதாப்பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் குரல் கொடுத்தமை எடுப்பாக இருந்தது. குரல் தந்தவர்களின் ஓசை நயம் 'சிலுவையின் அதிர்வுகள்' எனும் தலைப்பிற்கு உயிர் கொடுத்தனர். ஒலி, ஒளி ஆக்கங்கள் சிறப்பான முறையில் கையாளப்பட்டமை பாராட்டுக்குரியது. மக்களின் சிந்தனை ஒழுங்கிற்கு தடை ஏற்படுத்தவில்லை. அரங்கியற் கலை நெறிகளுக்கேற்ப, நீளரங்கு, ஒப்பனை, ஏற்ற உடை அலங்காரம், அசைவுகள் யாவும் திருப்தியளித்தன. காட்சி மாற்றங்கள் சீரான முறையில் நடைபெற்றிருந்தன.

திருமறைக் கலாமன்றத்தின் நிறுவுனர் – இயக்குனர், அருட்பணி. கலாநிதி மரிய சேவியர் அடிகளாரின் கலை இலக்கிய சமய செயல் வடிவங்களுக்கு, ஆரம்ப காலத்திலிருந்தே தோள் கொடுத்தவர்களுள் உரும்பிராய் பங்கு மக்களும் உள்ளடங்குவர்; இம் மன்றின் 50 வருட கால வளர்ச்சியில் இதுவும் ஓர் 'பொற்றூறல்' எனில் மிகையாகாது; வைரத்தின் அழுத்தத்தையும், கனதியையும் தாண்டி காலத்தால் நீடிக்கும் என்பது நம்பிக்கை.

புதிய ஆலயக்கட்டுமானப் பணிகளின் இன்பச் சுமையில், பங்குத்தந்தையும், பங்கு மக்களும் இணைந்து இது போன்ற இன்னொரு சுமையையும் தாங்கும் திராணி பெற்றவர்கள். இவர்களின் நெடும் பயணம் தொடரட்டும்.

இத் தவக்கால நிகழ்வின் அளவுகோல், ஆலய வளாகம் நிறைந்திருந்த மக்கள் குழாம் –அவர்களின் மௌன பங்களிப்பு, அமைதி சார்ந்த பக்தி. நான் பல தடவைகள் அவைதனை நோக்கிய வேளை, எடுத்த காரியத்தின் நற்பயன் கரங்களில் தவழ்ந்தது என்பது திண்ணமான முடிவு. (படம்: 16ம் பக்கத்தில்)

இரசித்தனுபவித்தவன் –
அருட்தந்தை. ஞா. எட்மன் மைக்கல் அ.ம.தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# பரிசுத்த வாரச் சிந்தனைகள்

### பெரிய வியாழன்: ஆண்டவரின் இறுதி இராவுணவுப் பெருநாள்

## பாதம் கழுவிப் பலியாகும் அன்பு!



1. இயேசு தம் சீடர்களின் பாதம் கழுவும் நிகழ்வை அவரின் பிறப்போடு ஒப்பிடுகின்றார் ஆயர் புல்டன் ஷீன். இயேசு (கடவுளின் மகன்), பந்தியிலிருந்து (விண்ணகத்திலிருந்து) எழுந்து, தம் மேலுடையைக் (இறை இயல்பை) கழற்றி வைத்து விட்டு ஒரு துண்டை (மனித இயல்பை) எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார் (மாட்டுக்கொட்டிலில் பிறந்தார்). பின்னர் ஒரு குவளையில் தண்ணீர் (அவரது இரத்தம்) எடுத்துச் சீடர்களுடைய (நம்முடைய) பாதங்களைக் (பாவங்களை) கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் (மனித இயல்பால்) துடைக்கத் தொடங்கினார். அவர்களுடைய காலடிகளைக் கழுவியபின் (இறந்து உயிர்த்தபின்) இயேசு தம் மேலுடையை (இறைஇயல்பை) அணிந்து கொண்டு மீண்டும் பந்தியில் (தன் வானகத்தந்தையிடம்) அமர்ந்தார் (திரும்பிச் சென்றார்) (காண் யோவா 13:4-5.12). பாதம் கழுவுதல் என்றால் இறங்கி வருதல் என்று பொருள். நாம் நம் உறவுகளில் ஒருவர் மற்றவருக்காக இன்று இறங்கி வருகிறோமா?

2. யூத மரபில் பாதம் கழுவுதலுக்கு மூன்று அர்த்தங்கள் இருந்தன:

1) தனிநபர் தூய்மை,
2)விருந்தோம்பலின் அடையாளம்,
3) எருசலேம் ஆலயச் சடங்கு முறை.

இயேசு தம் சீடர்களின் பாதம் கழுவிய நிகழ்வு இந்த மூன்றையும் தாண்டுகின்றது. விருந்து பின்புலமாக இருந்தாலும் இயேசு இதன் வழியாக ஒரு புதிய சீடத்துவத்தைத் தன் சீடர்களுக்குக் கற்பிக்கின்றார். பாதம் கழுவுதலையும் அப்பம் பிட்குதலையும் ஒன்றென ஆக்குகின்றார். மற்ற நற்செய்திகளில் தன் இறுதி இராவுணவில்

அப்பம், இரசம் கொண்டு நற்கருணையை நிறுவும் இயேசு யோவான் நற்செய்தியில் தண்ணீரையும், துண்டையும் கொண்டு நற்கருணையை ஏற்படுத்துகின்றார். பணிசெய்தலே நற்கருணை. பாதம் கழுவுதலே நற்கருணை என அருட்சாதனம் குறித்த புதிய போதனையை வைக்கின்றார் இயேசு. நம் வாழ்வில் நாம் ஒவ்வொரு முறை மற்றவர்களுக்குச் செய்யும் பிறரன்புப் பணிகளும் அருளடையாளங்களே!

3. இயேசு ஏற்படுத்துகின்ற குருத்துவம் இந்த நிகழ்விலிருந்துதான் ஊற்றெடுக்கின்றது. 'நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆகவே, ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்" என்று தன் முன்மாதிரியைப் பின்பற்ற சீடர்களை அழைக்கின்றார் இயேசு. நாம் குருக்களைப் போதகர் எனவும், ஆயர்களை ஆண்டவர் எனவும் அழைக்கிறோம். அப்படி அழைக்கப்படுபவர்கள் ஒருவர் மற்றவரின் பாதங்களைக் கழுவக் கடைமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பல நேரங்களில் பாதம் கழுவுதல் வெறும் பெரிய வியாழன் சடங்காக மாறி குருத்துவம் பீடத்தோடு அந்நியப்பட்டு நிற்பது கண்கூடு.

4. யோவான் நற்செய்தியில் நற்செய்தி பற்றிய நிகழ்வு இயேசுவின் அப்பம் பலுகச் செய்தலோடு (யோவான் 6) இணைந்துள்ளது. தன்னை வானினின்று இறங்கி வந்த உணவாக மக்களுக்கு முன் வைக்கின்ற இயேசு தான் மன்னாவிலிருந்து எப்படி மாறுபட்டவன் என்பதை வாழ்வு என்ற வார்த்தை வழியாக விளக்குகின்றார். இயேசுவின் உணவு அவர் தருகின்ற கொடை. இயேசுவின் சீடர்களின் வேலை அப்பங்களைப் பகிர்ந்து கொடுப்பதும், எஞ்சியவைகளைக் கூடைகளில் சேர்ப்பதும்தான். 'நீ சாப்பிடலாம். நீ சாப்பிடக் கூடாது" என்று யாரை யும் ஒதுக்கி வைக்க அவர்களுக்கு உரிமையில்லை. குருத்துவம் மக்களையும், இறைவனையும் இணைக்கும் ஒரு இணைப்புக் கோடுதான். ஆகையால் இறைவனை மக்களிடம் கொண்டு வருவதும், மக்களை இறைவனிடம் ஒப்புரவாக்குவதும் பணிக்குருத்துவத்தின் இலக்கு. அதற்கு அருளடையாளங்கள் குறிப்பாக நற்கருணை ஒரு வாயில். இயேசு விரும்பும் சீடத்துவம் பல நேரங்களில் பக்தி என்று மாறி விட்டதும் எதார்த்தம். நற்கருணை நம்மை பக்தர்களாக அல்ல, சீடர்களாக மாற்ற வேண்டும்.

5. அன்புக் கட்டளை. இறைவனிடமிருந்து அன்பைப் பெறுகின்ற நாம் அதை ஒருவர் மற்றவருக்குக் கொடுப்பதே அன்புக் கட்டளையின் நோக்கம். நம்மை நாமே ஒடுக்குதலும், நம்மை நாமே வெறுப்பதும் அன்பல்ல. மாறாக நம்மை நாமாக ஏற்றுக்கொண்டு நம் வாழ்க்கையையும், நம் இலக்கையும் அமைத்து அதன் வழியாக ஒட்டுமொத்த மனுக்குலத்தை ஓரடி முன்னிட்டுச் செல்தலே இயேசு இன்று கொடுக்கும் அன்புக்கட்டளை.

### ஆண்டவரின் திருப்பாடுகளின் புனித வெள்ளி

## இவர்களில் நான் யார்?

யோவான் நற்செய்தியாளர் எழுதியபடி இயேசுவின் பாடுகளை நாம் வாசிக்கக் கேட்டோம். இந்தப் பாடுகளின் வாசகத்தின் பின்புலத்தில் இருந்தது கூட்டம். இங்கே நம் ஆலயத்தில் இருப்பதும் கூட்டம். இயேசுவின் பணிவாழ்வில் இருந்த கூட்டம், அவரை எருசலேமிற்குள் ஆரவாரமாக அழைத்த கூட்டம் இன்று அவரின் தீர்ப்பின்போதும் நிற்கின்றது. இந்தக் கூட்டத்தை மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம். இந்தக் கூட்டத்தில் நான் யார்?

**1. யூதர்களும், அவர்களின் தலைவர்களும்**

இயேசுவிடம் இவர்கள் நேரடியாகப் பேசவில்லை. பிலாத்திடம் மட்டுமே பேசுகின்றனர். கூக்குரலிடுகின்றனர். 'தலைமைக்குருவுக்கு இப்படியா பதில்கூறுகிறாய்?" (யோவா 18:22) என்று இயேசுவைக் கன்னத்தில் அறைந்தது இக்குழுவே. 'எங்களுக்குச் சீசரைத் தவிர வேறு அரசர் இல்லை" (19:15) - இந்த வார்த்தைகள்தாம் இஸ்ராயேல் வரலாற்றின் மிகச் சோகமான வார்த்தைகள். 'நாம் உங்கள் கடவுளாயிருப்போம், நீங்கள் என் மக்களாயிருப்பீர்கள்" என்று மோசே தலைமையில் ஏன் அவர்களின் முதுபெரும் தந்தையர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு காலம் தொட்டு வந்த உடன்படிக்கையை, யாவே இறைவனின் அரசுரிமையை வெகு எளிதாகத் தூக்கி எறிந்து ஒரு புறவினத்து அரசனை தங்கள் அரசராக ஏற்க, அறிக்கையிடத் துணிகின்றனர். இது ஒரு சமயப் புறக்கணிப்பு. அவர்கள் ஒளியைவிட இருளையே விரும்பினர் (3:19). இயேசுவுக்கு தீர்ப்பு அளிப்பதாக எண்ணித் தங்களுக்கே தீர்ப்பிட்டுக்கொண்டவர்கள் இவர்கள் (12:47). 'அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்குரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள வில்லை" (1:11).

**2. பிலாத்து**

யூதர்களுக்கும், இயேசுவுக்கும் இடையே நடக்கும், ஓடும் ஒரு ஆளுநன். இருளுக்கும், ஒளிக்கும் நடுவே ஓடி முடிவெடுக்க முடியாமல் நிற்கும் ஒரு சராசரி மனிதன். தயக்கம், பயம், குழப்பம் - இவைதான் இவனிடம் இன்று மேலோங்கும் உணர்வுகள். இயேசு யோவான் நற்செய்தியில் மூன்று புறவினத்தாரைச் சந்திக்கின்றார்: சமாரியப் பெண் (4), கிரேக்கர்கள் (12:20), பிலாத்து (19). பிலாத்து மட்டும் தான் இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றான். இயேசுவின் போதனைகளையும், பணிகளையும் 'உண்மையா அது என்ன?' என்று கேலியாக்கி விடுகின்றான். தனக்கென்று பதவி, அரசியல் அதிகாரம் , படைவீரர்கள் , மரண தண்டனை வழங்கும் அதிகாரம் வைத்திருந்தாலும் இயேசுவின் முன் அனைத்தையும் இழந்து நிற்கின்றான். இயேசு தீர்ப்பிடப்படுதல் என்பதைவிட பிலாத்து தீர்ப்பிடப்படுதல் என்றுதான் இந்நிகழ்வை நாம் அழைக்க வேண்டும். இயேசுவின் வெளிப்படுத்துதலை உதறத் துணிகின்றான். அவனும் இருளிலேயே நடக்க விரும்பினான் (3:19).

**3. இயேசு**

அன்பு செய்யும் ஆயன், சான்று பகரும் நீதிபதி, மனுவுருவான வார்த்தை. தான் உண்மைக்குச் சான்று பகர வந்ததாக மொழிகின்றார் (காண் 1:7.15.19.34. 3:26. 5:33). இவரின் அடையாளமும் பணியும் ஒன்றுதான். இவரின் வாழ்வும் போதனையும் ஒன்றுதான்: உண்மை, உண்மையைத் தவிர வேறில்லை. இன்று இவருக்கு இரண்டு முகங்கள்: 1) ஏளனம் செய்யப்பட்ட, தீர்ப்பிடப்பட்ட, எள்ளி நகையாடப்பட்டது ஒருபுறம். 2) தன் ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கின்ற ஆயன், சிலுவை என்ற அரியணையில் அமர்ந்த அரசன், உலகிற்குத்தீர்ப்பளிக்கும் நீதிபதி மற்றொருபுறம். இம்மரணம் இயேசுவிற்குத் தோல்வியல்ல. உலகத்திற்குத்தான் தோல்வி.



அங்கே நின்றிருந்தவர்களின் பார்வைக்கு இது ஒரு தோல்வியாகத் தெரிந்தது. ஆனால் இயேசுவைப் பொறுத்த வரையில் இது உயர்த்தப்படுதல் (3:14). அவர் மாட்சி பெறும் நேரம் (12:23). கோதுமை மணி மடியும் தருணம். இந்தக் கூட்டத்தில் நான் யார்? இன்று நான் அளிக்கும் பதிலே உயிர்ப்பு அனுபவத்திற்கு என்னை அழைத்துச் செல்லும். 'உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (8:32).

### ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா

## முடிவு என நினைத்தவருக்கு விடிவு



பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் எகிப்தின் அடிமைத் தளையிலிருந்து மோசே தலைமையில் விடுதலை பெற்றவர்களாய் செங்கடலைக் கடந்து சென்றதையும், புதிய ஏற்பாட்டில் இயேசு இறப்பைக் கடந்து பாவத்தை அழித்து உயிர்த்ததையும் ஒரே வாக்கியத்தில் சொல்ல வேண்டுமென்றால்: 'எல்லாம் முடிந்தது என்று நினைத்தவர்களுக்கு விடிந்தது!' என்று சொல்லலாம்.

பின்னால் பாரவோனின் படைவீரர்கள். முன்னால் செங்கடல். இரண்டு பக்கம் சென்றாலும் அழிவு நிச்சயம். இச்சூழலில் 'எங்களை அழிக்கவா இங்குக் கூட்டி வந்தீர்!' என்று மோசேயைப் பார்த்து இஸ்ரயேல் மக்கள் பயத்தால் அலறிய போது, எல்லாம் முடிந்து விட்டது என்று நினைத்தபோது அங்கே விடியச் செய்கின்றார் இறைவன். கடல் பிரிகின்றது. பாதை தெரிகின்றது.

பாதம் நனையாமல் கடந்து செல்கின்றனர். முப்பது வருடங்கள் தம்மையே தயாரித்து, மூன்று வருடங்கள் பன்னிரண்டு சீடர்களோடு பட்டிகள் தோறும் பயணம் செய்து நோய்களைக் குணமாக்கி, பேய் பிடித்தவர்களுக்கு நலம் தந்து 'இறையரசு நெருங்கி வந்துவிட்டது!' என அறிவித்த ஒருவர், 'தாவீதின் மகனுக்கு ஓசான்னா!' என்று நாம் வாழ்த்துப்பாடிய ஒருவர், 'மெசியா வந்துவிட்டார். நம் துன்பமெல்லாம் அழிந்துவிட்டது!' என நாம் கனவு கண்டுகொண்டிருக்க இதோ சிலுவையில் மிகக் கொடூரமாய் இறந்து போனாரே! என்று புலம்பிக் கொண்டிருந்த சீடர்களுக்கும் இன்று விடியல். இயேசுவின் சீடர்களை விட அவரின் எதிரிகளே அவரின் உயிர்ப்பின் மேல் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆகையால்தான் கல்லறைக்குக் காவல் வைக்கத் துணிகின்றனர்.

பழைய ஏற்பாட்டு மக்கள் கடந்ததற்கு ஒரே உதாரணம்: 'நனைந்த தரை'. புதிய ஏற்பாட்டில் இயேசு கடந்ததற்கு ஒரே உதாரணம்: 'வெற்றுக்கல்லறை'. 'அவர் இங்கு இல்லை!' - இதுதான் அவருடைய கல்லறையில் அவராய் எழுதி வைத்த வாசகம். 'சீடர்கள் கண்டார்கள், நம்பினார்கள்' என்று விவிலியம் சொல்லும்போதும் 'வெற்றுக் கல்லறையையே' குறிப்பிடுகின்றது.

இன்றும் நம்மைக் கட்டி வைக்கும் ஒரு வார்த்தை இதுதான்: 'எல்லாம் முடிந்துவிட்டது! இனி ஒன்றுமில்லை!' நம் வாழ்வில் இழப்புகள் வரும்போதும், நம் உடல்நலம் தளரும்போதும், நமக்கு நெருக்கமானவர்கள் நம்மை விட்டுப் பிரியும்போதும், தொழிலில் நஷ்டம் வரும்போதும், குடும்பத்தில் பிரச்சினைகள் வரும்போதும், 'எல்லாம் முடிந்துவிட்டது!'

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடவுளின் வழிகளை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர் என்றும் விளக்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். இன்று எத்தனை கிறிஸ்தவர்கள் தங்களின் துன்பமெனும் பாலை நிலத்தில் முணுமுணுத்து கடவுளின் வழிகளை ஏற்காமல் இறக்கின்றனர் என்றும் கூறிய திருத்தந்தை நாமும் இந்த மக்களின் தவறையே அடிக்கடி செய்கிறோம். வாழ்வின் அதிருப்திகளால் பல கிறிஸ்தவர்கள் நஞ்சூட்டப்பட்டுள்ளோம். கடவுள் நல்லவர். வாழ்வின் கடினமான நேரங்களை ஏற்பதற்கு அவரின் அருளை மன்றாடுவோம் என்று அறிவுறுத்தினார்.

## திருத்தந்தையின் கை பட்டவுடன்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

னால் செப்பே "புனித ஜனுவாரிஸ் திருத்தந்தையை அன்புசெய்கிறார் என்பதற்கான அடையாளம் தோன்றியுள்ளது.. ஏனென்றால், அவருடைய இரத்தத்தில் பாதி இப்போது திரவமாக மாறிவிட்டது" என்று ஒலிபெருக்கியில் அறிவித்தபோது கூடியிருந்த பெருந்திரளான மக்கள் கூக்குரல் எழுப்பி ஆரவாரம் செய்தார்கள். பலர் கண்ணீர் சிந்தினார்கள். இதனைக் கேட்ட திருத்தந்தை, "இரத்தத்தில் பாதி மட்டுமே திரவமாக மாறியிருப்பதால் நாம் இன்னும் நிறைய செய்யவேண்டியிருக்கிறது. புனிதர் எம்மை அரைவாசிதான் அன்பு செய்கிறார்" என நகைச்சுவையாகக் கூறினார். ஆனால், பின்னர் படிப்படியாக முழு இரத்தமுமே திரவமாக மாறிவிட்டது.

புனித ஜனுவாரிஸ் மூன்றாம் நூற்றாண்டில் ஆயராகப் பணிபுரிந்து வேதசாட்சியாக மரித்தவர் என்பதும், இவருடைய இரத்தம் யூசேபியுஸ் என்ற பெண்மணியால் பாதுகாக்கப்பட்டுத் திருப்பண்டமாகப் பேணப்பட்டு வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிரமாண்டமான உலக இரட்சகர் சிலை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இறைமக்கள் இந்நிகழ்விற்கு வருகை தந்தனர். நினைவு முற் றத்தினை சுனாமி பேரனர்த்தத் தின் போது பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி றோய் பேடினட் அவர்கள் ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். "சுமை சுமந்து சோர்ந் திருப்போரே என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இறைப்பாறுதல் தருவேன்" எனும் வாசகம் பொறிக்கப்பட்ட இந் நினைவு முற்ற மானது மணற்காட்டுப் பங்கை கிறிஸ்து இரட்சகரின் பூரண பாதுகாவலில் ஒப்புக்கொடுக்கப்பட்டதின் அடையாளமாகவும் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (படம்: 16ம் பக்கத்தில்)

## உலகியல் மாயைகளைக் களைந்து விட்டு ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பலி முடிவில் ஆயர் அவர் கள் தூய ஆவியைப் பற்றி விளக்கும் நற்செய்தி பகுதிகளில் இருந்து வினாக்களைக் கேட்டு தகுந்த பதிலளித்த மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கினார். ஆலய அருட்பணி. செயலாளர் உறுதிப்பூசுத லுக்கான ஆயத்த வகுப்புகளை நடாத்திய அருட்சகோதரன் றெக்ஷன், திரு.யூஜின் றெவல், திரு.போல், செல்வி.கனிஸ்ரா ஆகியோருக்கும் மற்றும் போட்டிக்கோ புனரமைப்பு பணிக்கு தாராள மனதுடன் பங்களிப்பு செய்த பங்கு மக்களுக்கும் நன்றி கூறினார். மேலும் ஆயரின் செயலர் அருட்தந்தை. விஜின்ரஸ் அவர்களுக்கும் ஏனைய அருட்தந்தையர்களுக்கும் பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார். அனைத்து ஏற்பாடுகளும் பங்குத்தந்தை அருட்பணி. J. நீக்கிலஸ் அடிகளாரால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

தகவல்: செல்வி. ம.ஜீன் யான்சிக்கா

## எந்த ஒரு குற்றமும்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மனித வாழ்வு தாயின் கருவறை முதல், அது இயற்கையான மரணம் அடையும் வரை புனிதமானது என்பதை வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, எல்லா வாழ்வும் புனிதமானது, ஏனெனில் மனிதர் ஒவ்வொருவரும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள். ஒரு கொலையை மற்றொரு கொலையால் தண்டிக்க விரும்பாதவர் அவர் என்றும் கூறியுள்ளார்.

அரசியல் கைதிகள், சிறுபான்மையினர் அல்லது அரசியல் அதிகாரத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கும் நபர்களை ஒழிக்கத் தேடும் சர்வாதிகார ஆட்சிகள் அல்லது தீவிரவாதக் குழுக்கள் மரண தண்டனையைப் பயன்படுத்துகின்றன. மரண தண்டனைகளால் திருஅவை, முதல் நூற்றாண்டுகளைப் போல தற்போதும் புதிய மறைசாட்சிகளால் துன்புறுகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை.

மரண தண்டனையை நிறை வேற்றுவது, நற்செய்தி அறிவிக்கும் பகைவரை அன்புகூருதல் என்ற கோட்பாட்டை மறுப்பதாக உள்ளது என கடந்த ஆண்டு அக்டோபர் 23ம் திகதி தான் கூறியதை மீண்டும் கூறுவதாகவும் உரைத்துள்ளார் திருத்தந்தை.

அனைத்துக் கிறிஸ்தவர்களும், நன்மனம் கொண்ட அனைவரும் சட்டமுறையான அல்லது சட்டத்துக்குப் புறம்பேயான மரண தண்டனைகளை ஒழிப்பதற்கு மட்டுமல்லாமல், கைதிகளின் மனித மாண்பு மதிக்கப்பட்டு சிறைகளின் நிலைமையை மேம்படுத்த உழைப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர் என்றும் கூறினார் திருத் தந்தை பிரான்சிஸ்.

## நெடுந்தீவுப் பங்கில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார். மேலும் இப்பங்கில் 50 ஆண்டுகளாக சேனை இயங்கி வருவது இறைவனின் மாபெரும் ஆசீர்வாதத்தின் வெளிப்பாடு எனத்தெரிவித்து, நாம் எல்லோரும் அன்னையின் பிள்ளைகளாக வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திருப்பலி முடிவில் பொன்விழா ஞாபக மலர் வெளியிடப்பட்டது. சேனையினர் தமது பொன்விழாவோடு தமது முன்னாள் பங்குத்தந்தையும் தற்போதைய யாழ் மறைமாவட்டத்தின் மரியாயின் சேனை ஆன்ம இயக்குநருமான அருட்பணி றெஜி இராஜேஸ்வரன் அடிகளாரின் குருத்துவப் பொன் விழாவையும் இணைத்து கேக் வெட்டி மாலை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். தொடர்ந்து நெடுந்தீவுப் பங்குமக்களும் அருட்தந்தைக்கும் சேனையினருக்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இவ்விழாவில் யாழ் கொமிசியத் தலைவரும் அவரோடு இணைந்த நிர்வாக உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தது மகிழ்ச்சியளித்தது. (படம்: 16ம் பக்கத்தில்)

## நன்றியும் வாழ்த்துக்களும்

பாதுகாவலன் ஈஸ்டர் சிறப்பிதழுக்காக தங்கள் ஆக்கங்களை அனுப்பிவைத்த அனைவருக்கும் நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிக்கின்றோம்.

இடம் போதாமை மற்றும் காரணங்களினால் சில சந்தர்ப்பங்களில் தங்கள் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது மாற்றங்கள் இல்லாமலோ பிரசுரிக்க முடியாமல் போனதையிட்டு வருந்துகிறோம். உங்கள் ஆதரவுக்கு நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் பாதுகாவலனின் வளர்ச்சிக்கு தங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

– ஆசிரியர்

## ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எனப் புலம்புகின்றோம். இறைவனின் பார்வையில் முடிவு என்பதே இல்லை. எல்லாம் புதிய தொடக்கம் தான். இந்தப் புதிய தொடக்கத்தைக் காண முதலில் நமக்குப் புதிய கண்கள் வேண்டும். அந்தக் கண்களின் பெயர்தான் நம்பிக்கை.

இயேசுவின் எதிரிகளும் அவருடைய கல்லறையை வந்து பார்த்தி ருக்கக் கூடும். அவர்களும் 'அவர் இங்கு இல்லை!' எனச் சொல்லியிருப்பார்கள். சீடர்கள் சொன்னதற்கும், அவர்கள் சொன்னதற்கும் வித்தியாசம் இது தான்: 'நம்பிக்கை!'. கண்டார்கள். நம்பினார்கள். 'ஆண்டவராகிய கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும், நாங்கள் அறிவிக்கும் நற்செய்தியும் வீண்!' என்கிறார் தூய பவுலடியார். இயேசுவின் உயிர்ப்பே நம் இறை நம்பிக்கையின் ஆணிவேர். அந்த நம்பிக்கைக்காக இன்று நன்றி கூறுவோம். இந்த நம்பிக்கை நமக்கு மனதளவிலும் வலுவூட்டுகிறது.

'அவர் கல்லறையில் இல்லை!' என்றால் எங்கே இருக்கிறார்? 'இதோ! நம் நடுவில் இருக்கின்றார்'. 'வாழ்பவரை இனி இறந்தோரிடம் தேடுவதேன்!' எங்கெல்லாம் வாழ்க்கை துளிர் விடுகின்றதோ, எங்கெல்லாம் மொட்டு விரிகின்றதோ, எங்கெல்லாம் உயிர் பிறக்கின்றதோ அங்கே அவர் இருக்கின்றார். அங்கே அவரைத் தேடுவோம். இதன் உட்பொருள் என்ன? நாம் கல்லறைகளாய் இருந்தால் இயேசு அங்கே இருப்பதில்லை. நாம் நம் பழையகால வடுக்களையும், பாவங்களையும் பற்றிக்கொண்டு 'என் பாவமே! என் பாவமே!' எனப் புலம்பிக் கொண்டிருந்தால் அங்கே கடவுள் இருப்பதில்லை. நம் புன்சிரிப்பில் கடவுள் இருக்கிறார்.

பல நேரங்களில் உயிர்ப்பின் மகிழ்ச்சியைவிட வெள்ளியின் சிலுவைச் சோகத்தையே விரும்புகிறோம். இஸ்ரயேல் மக்களும் ஒரு கட்டத்தில் 'எகிப்தின் இறைச்சிப் பாத்திரங்கள் அருகே அமர்ந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' எனத் தங்களின் இறந்தகாலத்தை நாடிச்செல்கின்றனர். அவர் உயிர்த்துவிட்டார். ஆகவே இனி நாம் பின்னால் பார்க்க வேண்டாம். முன்னால் பார்த்து நடப்போம். 'இயேசுவின் உடலுக்கு நறுமணத்தைலம் பூச வந்த பெண்களும், சீடர்களும் உயிர்ப்பின் சான்றுகளாய் மாறுகின்றனர்'. புனித அகுஸ்தினார் உயிர்ப்பைப் பற்றி இப்படிச் சொல்கிறார்: 'கல்லறையின் கல் புரட்டப்பட்டது இயேசுவை வெளியே கொண்டு வருவதற்கு அல்ல. மாறாக, சீடர்களை உள்ளே கொண்டு வருவதற்குத்தான்!'


இன்றும் நாம் உயிர்த்த ஆண்டவரைப் பார்க்கும்போதெல்லாம் நமக்கு இதுதான் தோன்ற வேண்டும்: 'நாம் கண்டதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்'. இயேசுவின் உயிர்ப்பிற்குப் பின் சீடர்கள் புத்துயிர் பெறுகின்றனர். 'கடவுள் நம்மோடு' என்று இறங்கி வந்த இயேசு 'கடவுள் நமக்காக' என ஏறிச் செல்கின்றார். எல்லாம் கடந்து விடும். சவுக்கடி, மறுதலிப்பு, சிலுவைத் துன்பம், தனிமை, ஏமாற்றம், சோகம், எல்லாம் நொடிப்பொழுதில் மாறிவிடும். 'முடிந்தது என்று நினைக்கும் போது அங்கே விடியும்'. இரவில் மடிந்த சூரியன் காலையில் எழுகின்றான். கிழக்கில் உதித்த சூரியனாய் இயேசு இன்றும் நம் நடுவில்.

நன்றி அருள்வாக்கு

### உதயபுரத்தில்

# தவக்காலத் தியானம்

## பாவ மன்னிப்பும் "அகாப்பே" வழியாக குடும்ப ஒன்றிப்பும்



பாசையூர் பங்கின் உதயபுரம் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் இவ் ஆண்டிற்கான தவக்காலத் தியானமொன்று நடைபெற்றது. அமலமரித் தியாகிகளின் புனித டிமெசனட் இறையியலக அருட்சகோதரர்கள் எமது பங்குதந்தையின் அனுமதியுடன் எமது பங்கில் வார இறுதி நாட்களில் வருகை தந்து பணிபுரிகிறார்கள். இதன் ஒரு நிகழ்வாகவே 13.03.2015 அன்று மாலை வெளியரங்க திருச்சிலுவைப் பாதைத்தியானமும் அதைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப் பட்டது.

மறுநாள் 14.03.2015 அன்று மாலை 5.00 மணியளவில் திருப்பலியுடன் ஆரம்பமாகிய தவக்காலத் தியானம், "பாவமன்னிப்பும், 'அகாப்பே' (உணவுப்பகிர்வு) வழியாக குடும்ப ஒன்றிப்பும்" என்கின்ற கருப்பொருளிலே இடம் பெற்றது. அர்த்தமுள்ள முறையில் தகுந்த ஆயத்தத்தோடு கிறிஸ்துவின் பாஸ்காப் பலியில் நாம் பங்கெடுக்கத் தயார்படுத்தும் முகமாக இத்தியானம் அமைந்திருந்தது. நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, பாவ மன்னிப்பு வழிபாட்டினைத் தொடர்ந்து பாவமன்னிப்பு அருட்சாதனமும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குடும்ப சமூக ஒன்றிப்பினை ஊக்கப் படுத்த பெற்றோர்களுக்கும், இளையோருக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்குமாக வெவ்வேறாக கருத்துப் பகிர்வும், எம்மத்தியில் உடைந்த உறவு ஒன்றிப்பு நிகழ்வு ஒன்றும் இடம் பெற்றது. இறுதியாக நற்கருணை ஆசீரைத் தொடர்ந்து "அகாப்பே" என்கின்ற பகிர்தலை நாம் மேற்கொண்டோம்.

இது எமக்கொரு புதிய அனுபவமாக இருந்தது. குடும்பங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து புதியதொரு உறவினைக்கட்டி எழுப்பவும் அன்பியங்களைப் புதுப்பிக்கும் நோக்குடனும் ஒன்றாகப் பந்தியமர்ந்து ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தின் இறையனுபவத்தையும் பகிர்தலையும் எமது வாழ்வாக்க இந்த "அகாப்பே" நிகழ்வு வழிசமைத்திருந்தது. இதில் ஏராளமான மக்கள் பங்கு பற்றிப் பயனடைந்தனர்.

– பங்கு மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண ஆண்டு

## அர்ப்பண வாழ்வின் தத்துவங்கள்

"அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" (யோவான் 17:19). அர்ப்பணவாழ்வு என்பது என்ன என்பதை நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து இந்த வசனத்தில் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார். இவ்வசனத்தில் வரும் ஒவ்வொரு வார்த்தையும் அர்ப்பண வாழ்வின் தத்துவங்களைப் பறைசாற்றி நிற்கின்றன என்று கூறலாம்.

முதலாவதாக, அர்ப்பண வாழ்வு என்பது ஒருவர் தனக்காக வாழும் வாழ்வு அல்ல, மாறாக, மற்றவர்களுக்காக. அதாவது அவருடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்காக தம்மையே முழுமையாக அர்ப்பணிப்பது என்பதை "அவர்கள்" என்ற வார்த்தை எடுத்தியம்புகிறது.

தொடர்ந்துவரும் "உண்மை" என்ற வார்த்தை அர்ப்பணவாழ்வின் நோக்கம் இறைமக்களை தவறேதுமின்றி நேரிய வழியில் நடாத்திச் செல்வதும், மிகமுக்கியமான பண்புகளாகிய நேர்மை, பிரமாணிக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து வாழ்வதுமாகும் எனக் கூறுகிறது.

அர்ப்பண வாழ்வை வாழும் ஒருவர் தம் பொறுப்பிலுள்ள அனைவரையும் இறைவனுக்கு உகந்தவர்களாக, தந்தையாகிய இறைவன் தத்தெடுத்த அன்புப்பிள்ளைகள் என்ற நிலக்குத் தகுதியுள்ளவர்களாக உருவாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளார் என்பதை "உமக்கு உரியவர் ஆகும்படி" என்ற வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன.

நான், எனது, எனக்காக, என்னில் ஆகிய சொற்பதங்கள் அர்ப்பண வாழ்வுக்கு அழைக்கப்பட்ட ஒருவருக்கு பொருத்தமில்லாத சொற்பதங்கள் என்பதையும், அர்ப்பண வாழ்வு வாழ்பவர் எதிலும் எப்பொழுதும் தனது மந்தையின் பொருட்டே தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் கையளிக்கிறார் என்பதையும் "அவர்களுக்காக" என்ற வார்த்தை அறிவிக்கின்றது.

ஒருவர் தனது வாழ்வின் சில கணப்பொழுதுகளையோ, தனது ஆற்றல்களில் சிலவற்றையோ, தனது அலுவல்களில் ஒருபகுதியையோ தனது பணிவாழ்வுக்காக ஒதுக்க அழைக்கப்படவில்லை, மாறாக, தன்னைப் பிரித்து பகுதிபோடாதவராக, அதாவது, தன்னையே முற்றும் முழுதாக அர்ப்பணிக்கினறவராக (Total Commitment) வாழவேண்டும் என்பதை "என்னையே" என்ற பதம் அறைகூவிநிற்கிறது.

அர்ப்பணவாழ்வு வாழ்பவர் செய்யும் ஒவ்வொரு செயற்பாடும், பேசும் ஒவ்வொரு வார்த்தையும், போடும் ஒவ்வொரு திட்டமும் இவ்வுலகில் யாரையும் திருப்திப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, அவ்வாழ்வுக்கு அழைத்த இறைவனின் மகிமைக்காகவே என்ற உண்மையை "உமக்கு" என்ற சொல்லில் காண்கிறோம்.

"அர்ப்பணமாக்குகிறேன்" என்ற இறுதி வார்த்தை ஒருவர் தன்னை அர்ப்பணவாழ்வுக்கு அழைத்தவரிடம் தன்னை முழுமையாக சரணாகதி ஆக்குகிறார் என்று விளக்குகின்றது.

மொத்தத்தில் அர்ப்பண வாழ்வின் பெறுமதியைத் தனது வார்த்தையினாலன்றி, வாழ்க்கையினால், வாழ்ந்து காட்டிய இயேசுவின் அடிச்சுவடுகளைப் பிரமாணிக்கத்தோடு பின் செல்ல விரும்பும் ஒவ்வொருவரும் "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" என்று அவரோடு கூட அறிக்கையிட தயாராக இருக்கவேண்டும், தகுதியுள்ளவர்களாக மாறவேண்டும். "எல்லாம் இறைவனுக்காகவே" என்னும் மந்திரத்தின் அர்த்தமும் இதுவேதான்.

நன்றி: திருக்குடும்ப சபைச் சஞ்சிகை, சங்கமம்

# லூக்கா நற்செய்தியில் இயேசுவின் உயிர்ப்பு

### முன்னுரை

"நசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகின்றோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ராயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரணதண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாட்கள் ஆகின்றன. ஆனால் இன்று எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர் அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றார்கள் அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து, வானதூதர்களைக் கண்டதாகவும் இயேசு உயிரோடிருக்கிறார் என்று அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள்" (லூக். 24:19-23).

### எம்மாவுஸ் சாலை அனுபவம் (லூக். 24:13-35)

நசரேத்து இயேசுவின் சிலுவைச் சாவினால் அவரது சீடர்கள் நம்பிக்கை தளர்ந்த நிலையில், சிதறுண்டார்கள். அவர்களுள் எம்மாவுஸ் நோக்கி நடந்த சீடர்கள் இருவரைச் சந்திக்கின்றோம். அவர்கள் ஏமாற்றத்துடன் உரையாடிக் கொண்டு நடந்தபோது, இயேசு அவர்களைச் சந்திக்கிறார். இயேசுவின் பிரசன்னத்தினால் விழிப்பும் புதுத்தூண்டலும் பெறுகின்றனர். அவர்கள் இயேசுவின் போதனையைக் கேட்டபின் பற்றி எரியும் உள்ளத்தைப் பெற்றார்கள். அவருடன் பந்தியில் அமர்ந்து அப்பத்தைப்பிட்டபோது இயேசுவை அடையாளம் கண்டார்கள். இயேசுவை அவரின் சாவுக்குப்பின் உயிரோடு கண்டதாக நம்பினார்கள். அவர் ஊனுடலுடன் இருக்கும்போது போதித்தது போல, போதிக்கக் கேட்டதாக உறுதியூண்டார்கள். இரண்டு சீடர்களும் எம்மாவுசுக்குச் செல்லாது, எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள். அங்கிருந்த தம்மவருடன் அவர்கள் கண்டதையும், கேட்டதையும் பகிர்ந்து கொண்டார்கள்.

வாழ்க்கைச் சாலையில் பல இழப்புக்கள், ஏமாற்றங்கள், கானல் நீர் நிலைகள்! ஆனால் தொடரும் பயணத்தில், அவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டே வழிநடந்தால், நாமும் உயிர்ப்படைய ஆற்றல் பெறுவோம் என லூக்கா நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறார். வாழ்வு அழிக்கப்பட்ட இடங்கள் வாழ்வைத் தந்த இடங்களாகும் அவையே வாழ்வைத்தரும் இடங்கள் என்பதை எருசலேம் உணர்த்துகிறது. எருசலேமை விட்டு விலகி, எந்தச் சாலையில் நாம் நடந்தாலும் வாழ்வளிக்கும் இயேசு நம்மைச் சந்திக்கிறார்! இறைவார்த்தையின் ஒளியில் வாழ்க்கையின் அனுபவங்களைப் பார்க்கும்படி எங்களைத் தூண்டுகிறார். அவரோடு பந்தியமர்ந்து, புதுப்பார்வை பெற அழைக்கிறார். அவ்வனுபவம் அவரது ஆற்றலில் நாம் நடக்க தூண்டுதலளிக்கின்றது.

### உயிர்ப்பு உரையாடலுக்கல்ல

புனித லூக்கா இயேசுவின் உயிர்ப்பு கலந்துரையாடலுக்குரிய ஒரு நிகழ்வு அல்ல, மாறாக, சீடர்கள் இயேசுவை வாழ்க்கைச் சாலையில் சந்திப்பதால் மலரும் விசுவாச வாழ்வாகும் என்கிறார். இயேசு ஒருவராலே மட்டும் அளிக்கப்படும் இறையாற்றலை உணர்ந்து நம்பிக்கையுடன் முன்னோக்கிச் செல்லும் வாழ்வாகும். உயிர்த்த இயேசுவை சீடர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் சந்தித்தார்கள் என நற்செய்தியில் காண்கிறோம். அச்சந்திப்புக்கள் இயேசுவைக் கொலைசெய்த வன்முறையாளர்கள் மத்தியில், தொடரும் பாதுகாப்பின்மையில் அவர்களைச் 'சிறிய மந்தையாய்,' வாழும் துணிவை அளித்தன. அவை தம் வாழ்வையும் பலியாக்கி சாட்சியமாகும் திடத்தை அவர்களுக்கு அளித்தன. "நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து" (லூக். 22:31) என்ற இயேசுவின் வார்த்தையின்படி அவர்கள் ஒருவர் ஒருவரைத் திடப்படுத்தி வாழ்ந்து, ஓர் புதிய வரலாறு படைத்தார்கள். அவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வுகளும் (திப. 5:17-42) வன்முறையால் கொல்லப்பட்ட ஸ்தேவான் போன்றவர்களின் தியாகமும் (திப. 7:54-60). பாவுலுவின் மனமாற்றமும் வாழ்வும் உயிர்ப்பில் முன்னோக்கிய நகர்வுக்கு திசைகாட்டுகின்றன. இயேசுவின் உடலைத் தேடிக்கொண்டிருந்த மகதலா மரியா இயேசுவைச் சந்தித்து அவரது செய்திக்குப் பணிவுகொண்டு புறப்பட்ட பயணமும் இதனையே எடுத்துக்காட்டுகின்றது.

### இறைவனோடு ஒன்றித்த வாழ்வுக்கு சான்று

புனித லூக்கா திருப்பாடல் 16ன் ஒளியில் இறைவனோடு ஒன்றித்து வாழ்வோரின் உள்ளக வாழ்வை மரணம் அழிப்பதில்லை என்ற செய்தியை இயேசுவின் உயிர்ப்பின் வழியாக நமக்குத் தருகிறார் (தி.பா. 16:8). இறை ஆவியால் அருள் பொழிவு பெற்று, இறைமகன் என்ற உறவில் வாழ்ந்த இயேசு தம் மரணத்தால் அந்நிலையை இழக்கவில்லை என்கிறார். "அனைத்துக்கும் மேலாக இறையாட்சியையே நாடி, இறைவனுக்கு ஏற்புடையதையே செய்து வாழ்பவர்கள்" (மத். 6:33) இறைவனிலிருந்து பிரிவுபடுவதில்லை என்ற நம்பிக்கையை இயேசுவின் உயிர்ப்பு நம்மில் வளர்க்கிறது என்கிறார்.



உயிர்ப்பு நம்பிக்கை வாழ்வு இறையரசு நோக்குடையதாக வேண்டும். அவ்வாழ்வு "தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்" (உரோ. 14:17). "நாம் பல வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்" என்ற தெளிவுடன், நம் நம்பிக்கையில் நிலைத்திருப்பதும், ஒருவர் ஒருவரை ஊக்குவிப்பதும் யதார்த்த தேவையாகும் (திப. 14:22). இது உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வரலாறு படைத்த அப்போஸ்தலிக்க பாரம்பரிய அனுபவமும், படிப்பினையுமாகும்.

உயிர்ப்பு நம்பிக்கை என்பது நம் வாழ்வின் முடிவில் தோன்றுவதல்ல. நம் வாழ்வின் ஆரம்பமாக அது இருப்பதால்தான், இறையாட்சியின் ஆற்றலை உணர்ந்து, முன்நோக்கி நகர முடிகிறது. உயிர்ப்பு நம்பிக்கை இன்றி கிறிஸ்தவ வாழ்வு பிறர் கைப்பொருளாகிவிடும், சூழமைவுச் சிறை வாழ்வாகிவிடும். நம் வரலாற்றுக்குள் தம் வாழ்வை அந்நிலைக்கு உள்ளாக்கியவர்கள் உண்டு. ஆயினும் இன்னும் வாழ்வுண்டு எனச் சொல்வதற்கு நிறையவே நம்பிக்கை வேண்டும்.

ஜெராட் டீ ரொசய்ரோ, அ.ம.தி.

## உயிர்த்தெழுவாயே என் இயேசுநாதா!

– கு.ம. நாயகம், பொலிகண்டி

விண்ணுலகு தாமிருந்து மண்ணுலகு மானிடரை
பாவமதில் நின்றும் அடிமை விலங்கொடித்தும்
பாவிகளாம் எம்மை பாரினிலே மீட்டெடுக்க
வந்துதித்த மாசனுகா பராபரனே பாவிகளாம்
எம்மால் பாடுகள் பல பட்டு பாரச்சிலுவை தனில்
பகல் மூன்று மணியளவில் பரமபிதாவை வேண்டி
ஆவியை ஒப்படைத்தீர்
உயிர்த்தெழுவாயே என் யேசுநாதா!

காலத்தின் கோலமதில் நம்நாட்டுப் போரினாலே
துன்பதுயரங்கள் அங்கவீனர் விதவைகளான
ஆதரவற்ற எம் தமிழ் மக்கள் நெஞ்சமதில்
வேதனையும் சோதனையும்
ஆறாவடுவாகி அழுதொழுகும்
எம்மவர்க்கு உம்வார்த்தை போதனைகள்
நம்பிக்கை ஒளிஏற்றி
மானிலத்தோர் வாழ்ந்தொழுக
உயிர்த்தெழுவாயே என் யேசுநாதா!

நாட்டின் உயிர்த்துடிப்பாய்
சமூகத்தின் முதுகெலும்பாய்
வருங்கால தலைவர்களாய்
சரித்திரம் படைக்க வென்ற
எம் இளைஞர் யுவதிகளும் நாகரீக மோகமதில்
மூழ்கி தவிக்கின்றார் நல்லொழுக்க சீடர்களாய்
நம்தாய் திருச்சபையின் நற்போதனை ஏற்று
நம் சமூகம் செழிந்தோங்கி நல்வாழ்வு வாழ்ந்திடவே
உயிர்த்தெழுவாயே என் யேசுநாதா!

பங்கும் பணித்தளமும் பங்குமக்கள் புடைசூழ
இறைவார்த்தை தனைப்போற்றி
நற்போதனைகள் புகட்டும்
எம்பங்குத் தந்தையரும்
மற்றும் அருட்தந்தையரும்
ஆயர்களும் ஆசிபெற்ற
துறவறத்துச் சபையினரும்
இறைவன் திருவருளால் திருச்சபையை வழிநடத்த
உடல்நலமும் உளவளமும் நிறை ஆசிதாம் வழங்க
உயிர்த்தெழுவாயே என் யேசுநாதா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவப் பறவைகளுக்குப் பிரியாவிடை

- உயிரோவியன்

உன்
மனக் கதவைத்
திறந்து விட்டுத் தவம்
இரு
தவக்காலம்
பாவப் பறவைகளின்
பிரியாவிடைக் காலம்

மிக
நெருக்கமாகப்
போடப்பட்டிருக்கும்.
சாத்தான்களால்
சோதனை
சாவடி

நீ
அதைக் கடக்கும் போது
வேதனையில்
கைவிடக்கூடாது
மனதை

தவம்
என்பது வரங்களுக்காக
மட்டும்
அல்ல
கடவுளின்
மகிமைகளை
உணர்வதர்க்காகவும்
தான்!

## வாசிக்க... சிந்திக்க... வாழ...

### தன்னையே மாற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பு

ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் நோய்வாய்ப்பட்டார். பல சிறந்த மருத்துவர்களிடம் காண்பித்தும் நோய் குணமாகவில்லை. என்னசெய்வது என்று கவலையாக இருந்த அவரிடம், "நீங்கள் ஏன் ஒரு வெட்னரி மருத்துவரிடம் போகக் கூடாது?" என்று அவர் மனைவி ஆலோசனை சொன்னார். அதிர்ச்சி அடைந்த கணவர், "உனக்கு அறிவே இல்லையா?" என்றார். அதற்கு அவர் மனைவி, நான் நன்றாகத்தான் இருக்கிறேன். உங்களுக்குத்தான் எல்லாம் கெட்டுப்போச்சு. காலங்காத்தால கோழி மாதிரி எந்திரிச்சு, காக்கா மாதிரி குளிச்சிட்டு, குரங்கு மாதிரி லபக் லபக்னு இட்லியை விழுங்கிட்டு, பந்தயக் குதிரை மாதிரி வேக வேகமாக அலுவலகத்துக்கு ஓடி, அங்க மாடு மாதிரி உழைக்கிறீங்க. அப்புறம் உங்களுக்குக் கீழே உள்ளவங்ககிட்ட கரடி மாதிரி கத்துறீங்க. வேலை முடிஞ்சு வீட்டுக்கு வந்ததும் எங்கிட்ட நாய் மாதிரிக் குரைக்கிறீங்க. அப்புறம் முதலை மாதிரி ராத்திரி சாப்பாட்டை சரக் சரக்னு முழுங்கிட்டு, எருமை மாடு மாதிரி தூங்குறீங்க. அதனாலதான் சொல்றேன், இப்படி இருக்கிற உங்களை கால்நடை மருத்துவர்தான் குணப்படுத்த முடியும்" என்று சொன்னார். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கணவர் முழிக்க, "என்ன கோட்டான் மாதிரி முழிக்கிறீங்க?" என்று முத்தாய்ப்புடன் முடித்தார் மனைவி. மனிதம் நிறைந்த மனிதராய் வாழாவிட்டால் இப்படித்தான் கிண்டலுக்கு ஆளாக நேரிடும்.

### உலகை மாற்றும் வரம் தா!

Sufi என்ற ஆழ்நிலை தியானவழியில் சிறந்த Bayazid Bastami அவர்கள், தன் வாழ்வில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை இவ்வாறு விவரித்துள்ளார்: புரட்சிகளை அதிகம் விரும்பிய இளைஞனாய் நான் இருந்தபோது, "கடவுளே, உலகை மாற்றும் வரம் தா!" என்று இறைவனிடம் வேண்டினேன். நடுத்தர வயதை அடைந்தபோது, என் செபம் சிறிது மாறியது: "கடவுளே, என் குடும்பத்தினரை, நண்பர்களை, என்னைச் சுற்றியுள்ளவர்களை மாற்றும் வரம் தா!" என்பது என் செபமானது. இப்போது வயது முதிர்ந்த நிலையில், என் இறுதி நாட்கள் எண்ணப்பட்டுள்ளன என்பதை உணர்கிறேன். இப்போது நான் வேண்டுவது ஒன்றே... "கடவுளே, என்னையே நான் மாற்றிக்கொள்ளும் வரம்தா!" என்பதே என் இப்போதைய செபம். இந்த செபத்தை நான் ஆரம்பத்திலிருந்தே வேண்டியிருந்தால், என் வாழ்வு எவ்வளவோ மாறியிருக்கும். என்னைச் சுற்றியிருந்தவர்கள் மாறியிருப்பர். இந்த உலகமும் மாறியிருக்கும்.

"உலகில் நீ காண விழையும் மாற்றம் உன்னிடம் முதலில் துவங்கவேண்டும்" என்று சொன்னவர் மகாத்மா காந்தி. மாற்றங்களின் ஆரம்பம்... உலகமா, உள்ளமா?



### சீரிய சிந்தனை

ஒரு நாள் அரசர் ஒருவர், தனது பணியாளுடன் வெளியூர் சென்றார். இருட்டிவிட்டதால் வழியிலிருந்த ஒரு சத்திரத்தில் தங்க முடிவு செய்தார் அரசர். அங்கு ஒரு மரத்தில் குதிரையைக் கட்டிவிட்டு, தனது பணியாளிடம், இரவு முழுவதும் தூங்காமல் குதிரையைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார் அரசர். சுயமாக சிந்திக்கத் தெரியாத அந்தப் பணியாள், அரசரிடம், அரசே, இரவு முழுவதும் எப்படித் தூங்காமல் இருப்பது என்று கேட்டார். அதற்கு அரசர், ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சனை பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால் தூக்கம் வராது என்றார். பணியாளும், சரி நல்லது என்றார்.

சத்திரத்துக்குள் சென்ற அரசர், பணியாள் என்ன செய்கிறார் என்பதைப் பார்ப்பதற்காக, சிறிது நேரம் கழித்து வெளியே வந்தார். 'அரசே, நான் தூங்கவில்லை. வானில் இருக்கும் விண்மீன்கள் தானாக வந்தனவா அல்லது யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா என்ற சிந்தனையில் இருக்கிறேன் என்றார் பணியாள். நல்லது என்று கூறிச்சென்ற அரசர் சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்தார். பணியாள் சொன்னார்- அரசே, கடலில் உப்பு தானாக வந்ததா அல்லது யாரேனும் கொண்டுவந்து கொட்டினார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று. அரசர் நிம்மதியுடன் படுத்துத் தூங்கினார். காலையில் எழுந்து வந்து பார்த்தபோது பணியாள் சீரிய சிந்தனை வசப்பட்டு இருப்பதைப் பார்த்த அரசர், "இப்போது என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். பணியாள் சொன்னார்-அரசே, உங்கள் குதிரை தானாக ஓடி விட்டதா அல்லது யாரேனும் திருடிச் சென்று விட்டார்களா என, ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்று.

### ஏமாற்ற நினைப்பவர் ஏமாறுவது உறுதி

ஒரு நாள் இறைவனின் தூதர் ஒருவர், ஒரு மனிதரிடம் வந்து சொன்னார்:"மனிதா! இன்று உன்னுடைய வாழ்வின் கடைசி நாள். நான் உன்னை அழைத்துச்செல்ல வந்திருக்கிறேன். இன்று உன்னுடைய பெயர்தான் பட்டியலில் முதலில் உள்ளது" என்று.

சாகப் பயந்த அந்த மனிதர் ஒரு தந்திரம் செய்தார்.

"சரி, நீங்கள் இருக்கையில் அமருங்கள், நாம் இருவரும் புறப்படுவதற்கு முன் ஒரு தேநீர் அருந்திவிட்டுப் போகலாம்" என்று இறைத்தூதரிடம் கூறினார். அவரும் சம்மதிக்கவே, இந்த மனிதரோ, தேநீரில் தூக்க மருந்தைக் கலந்து கொடுத்து, இறைத்தூதர் மயக்கமுற்றிருந்த வேளையில், அந்தப் பட்டியலை எடுத்து முதலில் இருந்த தன் பெயரை எடுத்துவிட்டு, கடைசியில் கொண்டுபோய் எழுதி வைத்தார் அம்மனிதர். இறைவனிடமிருந்து வந்த தூதர் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் அம்மனிதரிடம் சொன்னார், "நீ என்னிடம் மிகவும் நன்றாக, அன்பாக நடந்து கொண்டாய். அதனால் நானும் உனக்காக என்னுடைய முடிவை மாற்றிக்கொண்டேன். அதாவது, பட்டியலின் மேலிருந்து இல்லாமல், பட்டியலின் கிழே இருந்து உயிர்களை எடுக்க முடிவு செய்துள்ளேன்" என்று.

### தாய்மையின் சிறப்பு



இரவு 12 மணிக்கு சாலையில் ஓர் வாடகைக் கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி, அந்தக் காரை கையசைத்து நிறுத்தினார்.

"தம்பி ஆஸ்பத்திரி போகணும்"என்றார் அப்பெண்மணி.

"நான் வரமுடியாது. சாப்பிட்டுட்டு, படுக்கப் போறேன்"என பதிலளித்தார் காரோட்டி.

"என் மகளுக்குப் பிரசவ வலி வந்து விட்டது, தயவுசெய்து வரமாட்டேன்னு சொல்லிடாதேப்பா" எனக் கெஞ்சினார் அப்பெண்மணி.

"நீங்க இவ்வளவு சொல்றதாலே வர்றேன். 500 ரூபா ஆகும்" என்றார் அந்தக் கார் ஓட்டும் இளைஞர். அப்பெண்மணி 500 ரூபா என்ன 1000 ரூபாய் கேட்டால்கூட தர சம்மதம் என்பதுபோல் வேகவேகமாக தலையாட்டி சம்மதிக்க, கார் அவர்களுடன் மருத்துவமனைக்கு விரைந்தது. மருத்துவமனையில்,நள்ளிரவின் நிசப்தத்தைக் கிழித்தது அப்பிரசவத் தாயின் அலறல். மூடிய விழிகளில் நீர் மல்க, அந்த நடுத்தர வயதுப் பெண்மணி கைகளைக் கூப்பி மகளுக்காக இறைவனிடம் வேண்டினார். அந்தக் கார் இளைஞரும் அமைதியாக அங்கே நின்றிருந்தார். ஒரு தாய் எவ்வளவு வேதனை அடைகிறாள் என்பதிலேயே அவரது சிந்தனை இருந்தது. இளைஞரின் மனது உறுத்தியது, தான் நான்கு நாட்களுக்கு முன்பு செய்த தவற்றை நினைத்து. சற்று நேரத்தில் மருத்துவர் வந்து சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்துள்ளதாகத் தெரிவித்தார்.

அந்தத் தாய், கார் இளைஞரிடம் "தம்பி! ரொம்ப நன்றிப்பா. இந்தா நீ கேட்ட பணம்" என பணத்தை நீட்டினார்.

"வேணாம்மா. எங்கம்மா என்னைப் பெற எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாங்கன்னு இறைவன் எனக்கு புரிய வச்சிட்டார். பணத்தை நீங்களே வைச்சுங்கங்க" என்று சொன்னபடி நடக்க ஆரம்பித்தார் இளைஞர். கைத்தொலைபேசியை எடுத்து எண்களை அழுத்தி.

"ஹலோ முதியோர் இல்லமா?" எனக் கேட்டார்.

"ஆமா என்ன இந்த நேரத்துல போன் பண்ணுறீங்க?" என கேட்டது மறுமுனை குரல்.

"மன்னிக்கவும், நாலு நாளைக்கு முன்னாடி அனாதைன்னு சொல்லி ஒருத்தரை உங்க இல்லத்துல சேர்த்தேன். அவுங்க அனாதை இல்லை, என்னப் பெத்த தாய். நாளைக்கு காலையிலே வர்றேன் அவுங்கள கூட்டிட்டு போக". முதியோர் இல்லப் பொறுப்பாளரின் அனுமதியைக்கூட கேட்காமல் கைத்தொலைபேசியை மூடிவிட்டு வண்டியை தீர்க்கமான முடிவோடு நகர்த்தினார் அந்த மகன்.

நிஜத்தை தரிசிக்கும் ஒவ்வொரு இதயமும், ஒரு மனிதரைப் பிரசவிக்கிறது.

*நன்றி: வத்திக்கான் வானொலி*

### புத்திசாலித்தனம் அனைவருக்கும் பொது



அன்புள்ள கணவருக்கு.. நீங்கள் கடத்தல் வழக்கில் சிறை சென்ற பிறகு நானும் குழந்தைகளும் வருமானமின்றி தவிக்கிறோம். நம் வீட்டின் பின்னால் உள்ள கற்பாறை மண்டிய நிலத்தைப் பண்படுத்தி, தோட்டம் அமைத்து காய்கறி பயிரிட்டு குடும்பத்தை நடத்திச் செல்லலாம் என்று எண்ணுகிறேன். ஆனால் நிலத்தைத் தோண்டும் வழிதான் தெரியவில்லை, என்று ஒரு சிறைக்கைதிக்கு அவருடைய மனைவி கடிதம் எழுதியிருந்தார்.

கைதி பதில் எழுதினார், அன்பே.. குடும்பச் செலவுக்காக வேறு ஏதாவது வழி செய்து கொள். பின்னாலிருக்கும் நிலத்தில் கை வைக்காதே. அங்குதான் நான் கடத்திய தங்கக் கட்டிகளைப் புதைத்து வைத்துள்ளேன்.. நீ ஏதாவது செய்யப் போக, பிறகு எனக்கு வைத்த இடம் மறந்து விடும், என்று.

ஒரு வாரத்துக்குப் பின் மனைவியிடமிருந்து கடிதம் வந்தது, அன்புள்ள கணவருக்கு, யாரோ ஒரு கூட்டத்தினர் பெரிய இயந்திரங்களுடன் வந்து நம் கொல்லைப் புறத்தைத் தோண்டி பாறைகளையெல்லாம் அகற்றினர். இப்போது நிலம் சீராகி விட்டது. ஆனால் தங்கக் கட்டிகள் எதுவும் இல்லையே..? என்று அதில் எழுதியிருந்தது.

கைதி திரும்பவும் மனைவிக்கு எழுதினார், அன்பே.. அவர்கள் காவல் துறையினர். நான் உனக்கு எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு தங்கம் தேடும் ஆவலில் தோண்டியிருப்பார்கள்.. ஆனால் உண்மையில் தங்கம் எதுவும் நான் புதைத்து வைக்கவில்லை.. இப்போது நீ காய்கறித் தோட்டம் பயிரிடு, என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பு

ஒரு உடையாத சிற்பம் உடைக்கப்பட்டது
கல்வாரி மலையில் மீண்டும்
தானே தன்னை செதுக்கி எடுத்தது
மூன்று நாளில்

மரணம்
திரும்பவும் வாழ்க்கை
துவங்குவதற்கான
அடிக்கல் நாட்டு விழா

கட்டப்பட்ட கல்லறைக்குள்ளும்
இருக்கிறது கருவறை
வாழ்வின் முடிவல்ல
இடைவேளை தான் மரணம்

அப்படி
முடிவாக இருந்திருந்தால்
நடந்திருக்காது
யேசுவின் உயிர்ப்பு

ஒரு உடையாத சிற்பம் உடைக்கப்பட்டது
கல்வாரி மலையில் மீண்டும்
தானே தன்னை செதுக்கி எடுத்தது
மூன்று நாளில்

உயிரோவியன்

## மன்னா உண்டால் மாட்சி உமக்கே



தேவன் தந்த
தெய்வீகத் திருவருட்சாதனம் -நீ
திடமாய் உண்டால்
தீங்கின்றி வாழ்வாய்

பகைமை போக்கி
பல்லாண்டு வாழ -எம்
பரமன் தந்த நல்ல
பல்சுவை உணவு

ஒற்றுமையை
ஓங்கவைத்து -என்றும்
அழியாத வாழ்வுக்கு
ஒளிதரும் உணவு

தேவ வாக்கியங்கள்
உன்னைத் திடப்படுத்தும் -என்றும்
மன்னா உண்டால்
மாட்சி உமக்கே

போர் எண்ணத்தைப்
புதைத்துவிடு -நல்ல
திடமான வாழ்வுக்கு
மனமாற்றம் போதும்

அப்பவடிவில்
அனுதினமும் வாழ்கிறான் -நாம்
வாழ வேண்டுமென்று
வதைத்தான் தன்வாழ்வை

ஒற்றுமை வேண்டி
உலகம் எங்கும் பறைசாற்று -எம்
உன்னத தேவன்
உன்னருகில் உயிர் தருவார்

சூது, வஞ்சனை நீக்கி
சுகமான வாழ்வு வேண்டி -என்றும்
மகத்தான வாழ்வு பெற
மன்னாவை மனதார ஏற்றுக்கொள்

என்றும் துதியுங்கள்
இறைவனை வேண்டி -தினமும்
வாழ்வு தருவோனின்
வார்த்தையின் படியே

பத்துக் கட்டளைகளை
பக்குவமாய் ஏற்றுக்கொள் -எம்
பரமதேவன் தருவான்
பல்லாக்கு நிறைய

கொடுத்து வாழ்ந்திடு
குவலயம் பொங்கும் -நம்
தேவன் சொன்ன வார்த்தைகளை
தினமும் உச்சரி

புதுக்கவிதையாலே
புகழ்கிறேன் உன்னை -என்றும்
புதுப்புது எண்ணங்கள்
புலரட்டும் என் மனதில்

பளையூரான்

# கண் திறந்தது



- சிறுகதை -

திருமதி ஜெ. இராக்கினி தேவி, உடுவில்.

பொன்னம்மாவின் கணவன் பீற்றரோ பயங்கரக் குடிகாரன். எப்படித்தான் குடித்தாலும் அன்றைய செலவுக்குரிய பணத்தை உழைத்துப் பக்குவமாக பொன்னம்மாவின் கையில் ஒப்படைத்து விடுவான். தான் கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டுவரும் பணத்தைப் பொன்னம்மா கவலையீனமாக வாங்காது இருந்து விட்டால் அவளுக்கு அடித்தும் விடுவான்.

அவளும் என்னதான் செய்வாள் தனது நாலு பிள்ளைகளையும் வளர்ப்பதற்கும் படிப்பிப்பதற்கும் அவனின் பணம்தானே வேண்டும். எனவே அடி வாங்கிப் பழக்கப் பட்டு விட்டாள்.

அன்றொருநாள் அவள் பூசைக்குச் சென்றுவிட்டு சிலுவைப் பாதையையும் சுற்றிவிட்டு கொஞ்சம் தாமதமாகவே வீட்டுக்கு வந்தாள். நேரத்தோடு வீட்டுக்கு வந்த பீற்றருக்கு அங்கு பொன்னம்மா இல்லாதது பெரும் ஆத்திரமாகவே இருந்தது. ஆத்திரத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு அவள் வரும்வரை முற்றத்திலேயே இருந்து விட்டான்.

அவள் வந்ததும் வராததுமாக "இவ்வளவு நேரமும் எங்கேடி போனாய் பொன்னம்மா" என மிரட்டினான். அவனுக்கு பொய் சொல்ல விரும்பாத பொன்னம்மா உண்மையைச் சொல்லிவிட்டாள். "சிலுவைப் பாதை சுற்றிவிட்டு வருகிறேன் அப்பா" என நடுக்கத்தோடு கூறினாள். பீற்றருக்கோ கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "நானும் நாள் முழுதும் சிலுவைப்பாதை சுற்றித்தானே இந்தக்காசைக் கொண்டு வாறன். இதைவிடவா உனக்குச் சிலுவைப்பாதை பெரிதாய் இருக்கிறது" எனக் கூறி நன்றாக அடித்து விட்டான். அவளுக்கு இன்றைய அடி மிகப் பலமாக இருந்தது. வலிபொறுக்க முடியாமல் இந்த அடிக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அண்ணனிடம் இதுபற்றிக் கூறினால் அவன் தன் கணவனை அடித்துக் கொன்று விடுவான். ஏனென்றால் இதுவரை தன் தகப்பனிடமோ அண்ணனிடமிருந்தோ ஒரு அடி கூட வாங்காது மிகச் செல்லமாக வளர்ந்தவள் அல்லவா பொன்னம்மா.

அடியின் வலி வேகம் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அடுத்த நாள் அண்ணனும் வீடு வந்தான். "அண்ணா அவர் இப்போது தினமும் குடி எனக்கும் ஒரே ஆக்கினை. அவரோடு சண்டைக்குப் போகாம மெதுவாகக் கூறிவிடுங்கள் குடிக்க வேண்டாமென்று" என்று கூறினாள்.

பீற்றரும் சற்றுக் குடித்து விட்டுத்தான் அன்றும் வந்தான். "என்ன மச்சான் நன்றாகக் குடிக்கிறீர்களாம். அது உங்கள் இருவரின் சந்தோசத்தைக் கெடுக்கும் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் மண்ணாக்கி விடும். எனவே குடியைக் கொஞ்சம் நிப்பாட்டுங்கோ" என மெல்லக் கூறிவிட்டு அண்ணன் சென்று விட்டான்.

அடுத்தநாள் வழமையை விட இன்னும் ஒருபடி கூடக்குடித்துவிட்டு "அடியே பொன்னம்மா இஞ்சாலை வாடி" எனக் கூப்பிட்டான் பீற்றர். பொன்னம்மாவும் பதறியயடித்துக் கொண்டுநடுங்கிக்கொண்டுஅருகேபோனாள்.

"என்னடி உன்ரை அண்ணன் என்னைக் குடிக்க வேண்டாமென்று கட்டளை வைத்துவிட்டுப் போகிறான். மை கார் மை பெற்றோல். என்ரை காசிலை நான் குடிப்பதற்கு அவன் என்னடி கேட்பது" என்று கூறிவிட்டு இன்னும் பலமாக அடித்து விட்டான். அவளுக்கு சரியான கோபமும் ஆத்திரமும் வந்தது. தேகத்தில் இரத்தக்கறை படிந்தது. ஐயோ இந்த நிலையில் அண்ணனிடம் சென்றால் இப்பவே அடித்துக் கொன்று விடுவார். என்ன செய்வது என்று கலங்கினாள்.

குடித்தாலோ வெறித்தாலோ அவளின் கணவனல்லவா அவன். அடி உதை வாங்கினாலும் அவளின் அன்புப் கணவன் அல்லவா அவன். என்ன செய்வது அப்பாவும் அண்ணனும் அவனை வேண்டாமென்று சொல்லியும் நான் அவரைத்தான் திருமணம் செய்வேன் இல்லாவிடில் சாவேன் எனக் குருவானவரிடம் கூறி அழுதபோது அவளின் நல்ல குணத்திற்காகவும் அவளின் உயிர் அந்தரத்தில் போகப் போகிறதே என எண்ணிய குருவானவர் அவளின் தகப்பனையும் அண்ணனையும் கூப்பிட்டு "இந்தத் திருமணத்தையே அவளுக்குச் செய்து வையுங்கள். அவனைக் குடிக்கவிடாது தடுப்பது என் பொறுப்பு" எனக் கூறி இந்தத் திருமணத்தைச் செய்து வைத்தவர் அவனைக் கூப்பிட்டு பலமுறை கூறியும் அவன் செவிசாய்க்கவில்லை. இருந்தும் திரும்பவும் அந்தக் குருவானவரிடம் சென்று தனது பரிதாப நிலையை எடுத்துக் கூறினாள். குருவானவர் கூறினார் "இனி அவனுக்குப் புத்திமதி கூறி எந்தவொரு பயனுமில்லை. மரித்த இயேசுவிடம் நன்றாக மன்றாடு அவரே இதற்கு விடுதலை கொடுப்பார்." அவளும் இறைவனிடம் இரந்து மன்றாடினாள்.

"பொன்னம்மா எனக்கு நெஞ்சுக்க ஏதோ செய்யுது. மூச்சு விட இயலாமக் கிடக்கு. என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போ" என அலறினான் பீற்றர்.

அவளும் பதறியடித்துக் கொண்டு அண்ணனிடம் ஓடினாள். அண்ணன் வந்து பார்த்தபொழுது அவன் அங்கும் இங்கும் புரண்டான். உடனே ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றனர்.

அங்கே அவனை நன்றாகச் சோதித்த டாக்டர் கூறிய மறுமொழி பொன்னம்மாவையும் அவள் அண்ணனையும் அதிர வைத்தது. அதிகமாகக் குடித்தமையால் அவனின் ஈரல் எரிந்து விட்டது. அவன் இனி உயிர் வாழ்வது சொற்ப நாளே என்றார். பொன்னம்மாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பீற்றரும் திடுக்குற்றான். "ஐயோ! எனது மனைவியும் நாலு பிள்ளைகளும் நான் இல்லாவிட்டால் நடுறோட்டில் நிற்கப் போகிறார்களே! கடவுளே! இதுவரை நான் செய்த பாவத்திற்கு தக்க தண்டனை கிடைத்து விட்டதே" எனக் கதறினான். பொன்னம்மாவும் சேர்ந்து அழுதாள்.

"பொன்னம்மா நான் இப்போது திருந்தி விட்டேன். நான் வாழும் நாட்கள் சொற்ப நாள் என்றாலும் குடிக்காமல் மெல்ல மெல்ல உழைத்து உன் பிள்ளைகளைக் காப்பாற்றுவேன். நாளை இறைவன் இயேசுவின் உயிர்ப்புவிழா நானும் உயிர்த்து விட்டேன். இனிக் குடிக்கமாட்டேன். இது சத்தியம்" என்றான். வாழப்போவது சொற்பநாள் என்றாலும் தன் கணவன் திருந்திவிட்டானே என எண்ணி இறைவனுக்கு நன்றி கூறினாள் பொன்னம்மா.

## உத்தமரின் உத்தானம்

சுயநலம் கலந்த அன்பும்
சுகமில்லாத மானிட வாழ்வும்
கவலைகள் நிறைந்த உறவுகளும்
களிப்பே இல்லாத வரவுகளும்
வேஷங்கள் கொண்டிங்கு உலாவரும்
வேறு வேறான முகங்களும்
பாசம் என்னவென்று காண
பாரினில் ஏங்கியே தவிக்கின்றேன்.
உண்மையான அன்பு உலகினில்
உயர்ந்தது என்று நினைத்திடினும்
அதனைக் காணாது ஏங்குகின்றேன்
உடலை வருத்தி உழைத்தாலும்
உள்ளமது அன்பிற்காய் ஏங்குகின்றது
உயர்ந்த சேவை செய்தாலும்
உள்ளத்தால் நாலும் பெண்தானே
உத்தமரே என் இரட்சகரே
உயர்ந்த உமது உத்தானம்
உதயமாக்கட்டும் என் வாழ்வை

ஜெ. றமணி, சில்லாலை.

## உயிரெழுத்தில் இயேசு

அன்புடன் எமை மீட்க
ஆணிகள் மூன்றில் தொங்கி
இன்னல் இடர்கள் தாங்கி
ஈட்டியால் விலாவும் திறக்க
உண்மைப் பலியாய் உயர்ந்து
ஊற்றாய் பொழிந்த அருளால்
என்னை நிறைத்த தேவா
ஏட்டில் வடிக்கும் நன்றியை
ஐயனே இயேசுவே உமக்கு
ஒன்றித்த உள்ளத்தவனாய்
ஓசை எழுப்பிப் பாட
ஔவையாய் நான் இல்லையே!
ஃதும் உன் அருள்தானே!

அல்பிரட் அருண்ராஜ். அ.ம.தி. சிறிய குருமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்"

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், "நீ மெசியா தானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, "கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!" என்று பதிலுரைத்தான். பின்பு அவன், "இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்" என்றான். அதற்கு இயேசு அவனிடம், "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார்.

அந்த மூவரின் உரையாடல் நமக்குள் பல சிந்தனைகளை எழுப்பலாம். ஆனால், நாம் தவக்காலத்தின் விவிலியத் தேடல்களில் இயேசுவின் சொற்களை மட்டும் தியானித்து வருவதால், அவரது கூற்றை மட்டும் நம் சிந்தனைகளுக்கு எடுத்துக் கொள்வோம்.

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்."

இயேசு தன்னோடு அறையுண்டிருந்தவருக்குக் கொடுத்த அந்த உறுதிமொழியில் மூன்று உறுதிகள் தரப்பட்டுள்ளன.

நீர் பேரின்ப வீட்டில் இருப்பீர்.
நீர் என்னோடு இருப்பீர்.
நீர் இன்றே இருப்பீர்.

முதல் உறுதி - நீர் பேரின்ப வீட்டில் இருப்பீர்: பேரின்ப வீடு, அல்லது மோட்சம், விண்ணகம் எப்படி இருக்கும்? விண்ணகம் என்றதும் நம் மனக்கண் முன் தோன்றும் காட்சியில், புகைமண்டலம், மேகம், மின்னும் விண்மீன்கள், வெண்ணிற உடை அணிந்த தேவதூதர்கள், இசை, நடனம் என்று கொண்டாட்டங்கள் தோன்றும்.

இறைமகன் இயேசு, சிலுவையில் கொடுத்த இந்த உறுதி மொழியில், "பேரின்ப வீடு" என்ற சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார். எபிரேய மொழியில் அவர் சொன்ன இந்த அபூர்வ சொற்றொடர், விவிலியத்தில் இன்னும் இரு இடங்களில் மட்டுமே (2 கொரி. 12: 3, திருவெளிப்பாடு 2: 7) பயன்படுத்தப் பட்டுள்ளது. இயேசு விண்ணகத்தை பேரின்ப வீடு என்று குறிப்பிடுகிறார். 'விண்ணகம்' என்ற சொல்லைவிட 'வீடு' என்ற சொல் மனதுக்கு நெருக்கமான, நிறைவான" ஒரு சொல்லாய் ஒலிக்கிறது.

ஆங்கிலத்தில் House என்பது நான்கு சுவர்களும், ஒரு கூரையும் கொண்ட ஒரு கட்டிடம். இதைக் கட்ட, மண், செங்கல், இரும்பு ஆகியவை தேவை. Home என்பது மனங்களால், அன்பால் கட்டப்படுவது. ஆழமான அர்த்தம் தரும் ஒரு சொல். அதேபோல், நம் தமிழ் மரபிலும், வீடு பேறு என்று சொல்வது இந்த உலகத்தைக் கடந்து, ஒரு நிறைவான, நிலையான அமைதியை, அன்பை நாம் பெறுவதை உணர்த்தும் ஒரு சொல்.

வீடு என்பதை ஓர் இடம் என்று சொல்வதைவிட, ஒரு நிலை என்று சொல்வதே அதிகம் பொருந்தும். 'வீடு' என்பது, ஒருவர் எவ்விதத் தயக்கமும், தவிப்பும் இன்றி, இயல்பாக இருக்கக்கூடிய ஒரு நிலை. நமது மனங்களில் உணரப்படும் இந்த 'வீடு', நான்கு சுவர்களும், கூரையும் கொண்ட ஒரு குறுகிய இடமாக இல்லாமல், திறந்த பரந்த புல்வெளிகள், பனிபடர்ந்த மலை முகடுகள், அடர்ந்த காட்டின் நடுப்பகுதி என்று பல்வேறு இடங்களாக இருக்கலாம். அல்லது, கூச்சலும் குழப்பமும் நிறைந்த ஒரு சந்தையாகவோ, அழுக்கும் நாற்றமும் நிறைந்த ஒரு சேரியாகவோ இருக்கலாம். எந்தச் சூழலிலும் ஒருவர் "வீட்டுணர்வைப்" பெறலாம். இயேசு அந்த மனிதருக்குத் தந்த உறுதிமொழி இதுதான்... நீர் அலைந்து, திரிந்தது போதும். "வீட்டுக்கு வாரும்" என்பதைத்தான், "நீர் பேரின்ப வீட்டில் இருப்பீர்" என்ற முதல் உறுதியில் கூறுகிறார்.

இரண்டாவது உறுதி - நீர் என்னோடு இருப்பீர்: மலையுச்சியில், அடர்ந்தக் காட்டில், சந்தையில், சேரியில்... வீடுகளை உணரலாம் என்று சிந்தித்தோம். வட துருவத்தில் ஒரு பனிப் பாறையின் உச்சியில் நான் மட்டும் நின்றால், எப்படி இருக்கும்? குளிராக இருக்கும். தனிமையாக இருக்குமா? அது என் மனதைப் பொறுத்தது. 'தனியாக' இருப்பதற்கும், 'தனிமையாக' இருப்பதற்கும் ஏகப்பட்ட வேறுபாடுகள். ஆயிரம் பேர் கூடி இசை நடனம் என்று கொண்டாடும் நேரங்களிலும் தனிமையாய் இருக்க வாய்ப்புகள் உண்டு. பெருநகரங்களில், 'டிஸ்கோ' நடனங்கள் நடக்கும் இடங்களுக்குப் போனால், காதைப் பிளக்கும் ஓசைகளின் நடுவில், அங்கு ஆடிக்கொண்டிருப்பவர்களின் மனங்களைப் பார்க்கமுடிந்தால், அவர்களில் பலர், தனிமைச் சிறைகளில் சிக்கியிருப்பது தெரியும்.

தனிமையில் இருப்பது வெறும் சிறை அல்ல. அதுதான் நரகம். தனிமை நரகத்திலிருந்து விடுதலை பெற, அன்பு, அரவணைப்பு இவற்றை உணரவேண்டும். "நீர் என்னோடு இருப்பீர்" என்ற வார்த்தைகள் வழியே, இயேசு, தன்னுடன் அறையப்பட்டிருந்த குற்றவாளிக்கு, அந்த அரவணைப்பை அளிக்கிறார்.

இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட இருவரும் பிறந்தது முதல் வாழ்க்கையின் ஓரங்களுக்குத் தள்ளப்பட்டு, அன்பு, அரவணைப்பு, வாழக்கூடிய வாய்ப்பு இவற்றை இழந்ததனால் குற்றவாளியாய் மாறியிருக்க வேண்டும். குற்றங்கள் புரிய ஆரம்பித்ததும், இன்னும் அவர்கள் மற்றவர்களிடமிருந்து விலகித் தனிமையில் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்களில் ஒருவர், "நாம் தண்டிக்கப்படுவது முறையே" என்று சிலுவையில் சொன்ன போது, தன் குற்றங்களை, தன் தனிமை உணர்வுகளை இயேசுவின் பாதங்களில் கொட்டுகிறார். அன்புக்கு, அரவணைப்புக்குக் காத்திருக்கும் அந்தக் குழந்தையின் மனதை புரிந்துகொண்ட இயேசு, அவரை உடலால் அரவணைக்க முடியவில்லையெனினும் உள்ளத்தால் அரவணைத்து, தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகத் தந்த உறுதி மொழிகள்தான் "நீர் என்னுடன் பேரின்ப வீட்டில் இருப்பீர்" என்ற சொற்கள்.

இயேசு மனு உரு எடுத்ததன் மையமே "கடவுள் நம்மோடு" என்பதை உணர்த்தத் தானே. தான் ஒரு 'எம்மானுவேல்' என்ற உண்மையை, சிலுவையிலும் இயேசு உணர்த்தியது, அழகான ஓர் இறை வெளிப்பாடு.

மூன்றாவது உறுதி - இன்றே இருப்பீர்: அன்பர்களே, இந்த உறுதியைப் புரிந்து கொள்வது சிறிது கடினம். இயேசு, சிலுவையில் அந்தக் குற்றவாளியைப் பார்த்துச் சொன்ன அந்த வார்த்தைகளில் எவ்வித நிபந்தனையும் ஒலிக்கவில்லை.

"இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்" என்று சொன்ன அந்த மனிதரைப் பார்த்து, இயேசு, நிபந்தனைகளோடு பேசியிருந்தால், இப்படிப் பேசியிருக்க வேண்டும்: "நீயா? இத்தனை குற்றங்கள் செய்தவனா? விண்ணகத்திலா? ம், பார்ப்போம். ஒரு சில ஆண்டுகள் உன் பாவங்களுக்குப் பரிகாரம் செய்துவிட்டு, பிறகு வா. அப்போது உன்னை விண்ணகத்தில் சேர்க்கமுடியுமா என்று பார்ப்போம்." நிபந்தனைகள் நிறைந்த வார்த்தைகள் இவை. ஆனால், இயேசு சொன்னது, "இன்றே நீர் என்னுடன் பேரின்ப வீட்டில் இருப்பீர்" என்ற உறுதி மட்டுமே.

பேதுருவின் இரண்டாம் திருமுகத்தில் நாம் காணும் வரிகள் இயேசுவின் "இன்றே" என்ற வார்த்தையைப் புரிந்துகொள்ள உதவும்.

பேதுரு இரண்டாம் திருமுகம் 3: 8

அன்பார்ந்தவர்களே, நீங்கள் ஒன்றை மறந்துவிடவேண்டாம். ஆண்டவரின் பார்வையில் ஒருநாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும், ஆயிரம் ஆண்டுகள் ஒருநாள் போலவும் இருக்கின்றன.

காலம் என்பது மனிதர்களாகிய நாம் ஏற்படுத்திக்கொண்ட ஓர் அளவு. நொடி, நிமிடம் என்று ஆரம்பித்து ஆயிரம் வருடங்கள், கோடான கோடி வருடங்கள் என்று நாம் எண்ணிக்கொண்டே இருக்கலாம். நேற்று, இன்று, நாளை, என்று பல பாகுபாடுகள் செய்து கொள்ளலாம். இறைவனுக்கு இவை கிடையாது. அவருக்கு, எக்காலமும், நிகழ்காலமே. இன்றே, இப்போதே என்பவை மட்டுமே அவரது அகராதியில் உள்ள சொற்கள். இறைவன் இருக்கும்போது, அங்கு, எப்போதும், நிரந்தரமாய் இருப்பது, நிகழ்காலம் மட்டுமே. மனித அறிவால் இதைப் புரிந்துகொள்வது கடினம். ஏனெனில் நாம் அனைவரும் நாமே உருவாக்கிக்கொண்ட காலத்தின் கைதிகள்.

நேரத்தைப்பற்றிய கவலையே இல்லாமல் வாழ முடியுமா? சில நேரங்களில் இப்படி வாழ்ந்திருக்கிறோம். நம் மனதிற்கு மிகவும் பிடித்தமான ஒரு செயலில் ஈடுபடும் போது, எடுத்துக்காட்டாக, அழகான இசையில் முற்றிலும் நம்மை மறந்திருக்கும் போது, அல்லது நம் மனதிற்குப் பிடித்தவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது... ஆழ்நிலைத் தியானங்களில் மூழ்கும் போது... நேரம் போனதே தெரியாமல் வாழ்ந்திருக்கிறோம் இல்லையா?

நேரம் போனதே தெரியாமல், நேரம் பற்றிய கவலையே இல்லாமல் நாம் வாழ்ந்த இந்தக் குறுகிய காலங்களை முழு வாழ்க்கையிலும் உணர்வதுதான் இறைவனுடன் நாம் இருக்கப்போகும் நேரம். அந்த அற்புதக் காலத்தை இயேசு, அந்த குற்றவாளிக்குத் தரும் வகையில், அவரிடம் "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்று சொன்னார்.

இயேசு கல்வாரியில் தன்னோடு அறையப்பட்டவருக்குக் கடவுளின் நிபந்தனையற்ற அன்பை உணர்த்தி அவருக்கு மீட்பளித்ததைப் போல், கடவுளின் பேரன்பை இந்த உயிர்ப்பின் காலத்தில் நமக்கும் உணர்த்தி, அவரது பேரின்ப வீட்டில் நம்மையும் இணைக்க வேண்டுவோம்.

நன்றி: அருட்பணி. ம. டேவிட், நியூயோர்க்

## இயேசுவின் வெற்றியின் நாள் இதுவே

அலகை தோற்கடிக்கப்பட்டது. அடிமை விலங்குடைக்கப்பட்டது. யேசு கல்லறையில் நின்று சாவை வென்ற சத்தியனாக உயிர்த்தார். இருளின் ஆட்சி அகல ஒளி மிக்க அருள் வாழ்வு எமக்குக் கிடைத்தது இன்று என நாம் மகிழ்வுறுவோம். ஆண்டவனின் உயிர்ப்பு எமது வாழ்வின் நம்பிக்கையின் அச்சாரமாகிறது கிறிஸ்துவோடு நாமும் உயிர்த்தவர்களாய் புதுவாழ்வில் புக உயிர்த்த இயேசு எம்மை அழைக்கிறார். மனிதனின் சாவை, வாழ்வை நிர்ணயிப்பது சாட்சிகளே. முன்னோரின் வாழ்க்கைப் பண்பாட்டை நினைவுபடுத்தும் சின்னங்கள் சாட்சிகளாக நம் கண்முன் நிற்கின்றன. மாபெரும் வரலாற்று நிகழ்வுகளுக்கெல்லாம் சாட்சிகளே ஆதாரம். இயேசு உயிர்த்தார் என்பது மயக்கத்தில் வெளிவந்த செய்தியல்ல. உயிர்ப்பு என்ற வரலாற்று நிகழ்வுக்கு சாட்சிகளே. இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகள் இரண்டு, ஒன்று காலியான கல்லறை. யேசுவின் கல்லறைக்குத்தான் எத்தனை பாதுகாப்பு. துணிச்சலான வீரர்கள். பெரிய மூடுகல் (பாறாங்கல்) [illegible] சாவைக் கடந்தவருக்கா இத்தனை தடைகள் இயேசு உயிர்த்த அந்த நொடியை யாரும் பார்த்ததாகச் சொல்லப்படவில்லை. ஆனால் காலியான கல்லறை சொல்லியது. சுருட்டி மூலையில் வைக்கப்பட்ட துணி சொல்லியது. "காலியான கல்லறை" அறிந்து பிலாத்து கலங்கினான். யூத சமுதாயமே கலங்கிற்று.


இரண்டாவது சாட்சி பெண்கள், சீடர்கள், மகதலாமரியா இயேசுவைக் கண்ணால் கண்ட சாட்சி. அவரது உயிர்த்த குரலை காதால் கேட்ட சாட்சி. மூன்று முறை மறுதலித்த பேதுருவின் சாட்சி. இறந்த அவர் உயிர்த்தெ[illegible]ண்டு குடித்த நாங்களே இதற்குச் சாட்சிகள். எனப் பேதுரு அறிக்கையிடுகிறார். இந்த மனித சாட்சிகள் மிரட்டலைக் கண்டு மரணத்தைக் கண்டு தயங்கவில்லை உயிர் போகும்வரை சாட்சிகளாக நின்றார்கள்.

நாம் சாட்சியவாழ்வு வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். நம் சமயச் சிந்தனைகள் நம்பிக்கைகள் வரும் சந்ததியாருக்கு நினைவுச் சின்னங்களாய் எழுந்து நிற்கின்றனவா? யேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகளாய் நிற்பதே நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை உணர்ந்து வாழ்வோம்.

J.E. இராசநாயகம், O.L.R. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழும்போது எனைத் தாங்கும் சுமைதாங்கியே விழுந்திட்ட உனை இங்கு யார் தாங்குவார்?



இறைதந்தையின் சித்தம் நிறைவேற்ற
மறைபோதகப் பணி பாரினில் ஏற்று
கறைகள் களைந்து எமைப் புனிதமாக்க
நிறைமனதுடன் கையளித்த கருணையின் செம்மலே!

மண்ணில் பிறந்திட்ட மாந்தர்
விண்ணில் புகுந்து மகிழ்வுடன்
எண்ணில்லா மகிமையில் துலங்க
வெண்ணிலவாய், புவி இருள் நீக்க வந்தீரே

தொகையறியா பாவம் புரிந்த மானிடர்க்கு
தயைவளிக்க தாகம் கொண்ட உமை
பகை கொண்டு பழிவாங்கியது மனித இனம்
சுமை தாங்கியாய் நீரும் சுமந்திட்டீர் சிலுவை

வாழ்வுப் பயணத்தில் வீழ்பவன் எழக்கூடா தென்ற
காழ்புணர்வினர் மத்தியில் நானும் வீழ்கையில்
விழிப்புணர்வைக் காட்டி கரம் பற்றினீர் -இன்றும்
ஒழிப்புணர்வில் உமை வீழ்த்துகையில் தாங்குவது யாரோ

இன்பதுன்பம் இயைந்து வரும் வாழ்விலே -என்
துன்பத்தைப் போக்க துணைநின்ற முன்னோடியே
வன்ம நெஞ்சினர் பதிக்கும் முட்பாதையில்
இன்றும் சீமோனாய் துணை வர யாரோ

சொற்களைவிட செயலுக்கு வலிமை என
பற்பல இடங்களில் புதுமையால் உணர்த்தினீர்
செயலூக்கம் கொண்ட வரோணிக்காள் துணிவுடன்
வலுவற்ற மாந்தரில் உன்முகம் துடைக்க வருபவர் யாரோ.

தோல்வி என்ற தோற்றத்தைச் சூட்டியே
வேள்வி காண வைத்த சமூகத்தில் எனக்காய்
தோல்வியைத் தோழனாய் நேசித்தே வெற்றியளித்தீர்
துகிலுரிந்த தோற்றத்தில் நீ வாடுகையில் ஆடையாய்
யாரோ

பண்புடன் அறிவைப் பெற்றவர்களும் -இன்று
வன்சொல் ஆணிகள் அறைந்த வேளையில்
என்பும் பிறர்க்காய் ஈவதே தியாகமென தென்பூட்டினீர்
அன்புக் கரங்களில் ஆணிகள் தாங்கியே உமை கழற்றிட
யாரோ

ஆண்டவர் திருவுளத்திற்குப் பணிந்ததால்
மாண்டிட வேண்டுமே என்ற விரக்தி சூழ்கையில்
வலுவின்மையில் தான் வல்லமை பிறக்கிறதென்றீர்
வலுவற்ற உடலைத் தாங்கும் வீரத்தாய்க்கு ஆறுதல்
யாரோ

இலட்சியப் பயணம் பாடுகளின் பாதையில்
புரட்சியாய் கல்வாரியில் மிளிர்ந்திட்ட போதும்
கல்லறையிலும் கருவறை உண்டென நிரூபித்தே
நல் நேயனாய் உயிர்த்தே உயிரளித்தீர் எமக்கு!

வல்லவர் உம் உயிர்ப்பிற்குச் சான்றாய்
துல்லியமாய் பதிக்கின்றேன் என் பாதங்களை!!

S.M. வுளோறன்ஸ், இளவாலை

# உலகை வெற்றி கொண்ட இறைமகன்



சிலுவையில் பாவம் போக்கும் பலியாக பரமதந்தைக்குப் பலியானார் இயேசு என்ற பெயரைக் கொண்ட அந்த இளைஞன். அவரை இறை தந்தை மகிமைப்படுத்தினார்.

எசா 53:10,11 ஆண்டவரின் திருவுளம் அவர் கையில் சிறப்புறும்.

அவர்தம் துன்ப வாழ்வின் பயனைக்கண்டு நிறைவடைவார்.

நேரியவராகிய என் ஊழியர் தம் அறிவால் பலரை நேர்மையாளராக்குவார்.

வெற்றிக்காக இயேசு தனது பாடுகள் மரணம் மூலமாகத் தன்னையே இறை தந்தைக்குப் பலியாக்கி மனிதரிடம் ஒட்டியிருந்த சாவு என்ற பாவ இருளை அகற்றி சாவையும், அலகையையும் வெற்றிகொண்டு முன்பு உரைத்திருந்தபடி மாட்சியுடன் ஆன்ம சரீரத்தோடு உயிர்பெற்றெழுந்தார். உயிர்பெற்றெழுந்த இறைமகனைக் கண்ட அவருடையஎதிரிகள் செய்வதறியாது திகைத்து நின்றார்கள். அலகையும் அவர்களோடு சேர்ந்து குழம்பிப்போய் நின்றது. தன் திட்டமெல்லாம் பாழாகிவிட்டதே என அலகை ஓலமிட்டு அலறியது என பல புனிதர்கள் எழுதியுள்ளார்கள்.

இயேசு உயிர்பெற்று எழுந்த நாள் திருச்சபை மக்களின் கடத்தல் திருவிழா. செங்கடல் வழியாக அன்று இறைவன் தன் மக்களை அழைத்துச் சென்றார். அதேபோல் இயேசுவின் குருதியினால் கழுவப்பட்ட மக்களாய் பாவத்தின் அடிமையில் நின்று மீட்கப்பட்டு திருமுழுக்கு என்ற தூய ஆவியின் தண்ணீரினால் கழுவப்பட்டவர்களாய் இயேசுவோடு உயிர்பெற்று எழுந்திருக்கிறோம்.

இயேசு உயிர்பெற்று எழுந்தபோது விண்ணகம் திறக்கப்பட்டது. அவர் பரலோகத்துக்கு எழுந்தருளி முதல் மனிதனாக விண்ணகத்தில் கால் பதித்தார். உலகை வெற்றிகொண்ட மணமகனான அவர் தனது மணமகளாகிய திருச்சபையை இவ்வுலகில் விட்டுச் சென்றார். இந்த சிறிய நாட்டில் வாழும் அத்தனை கத்தோலிக்க மக்களும் இன்று இறைவனின் உரிமை மக்கள் தூய ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்கள். அவரினால் புதுப்பிறப்பை அடைந்தவர்கள். இவர்களைப்பற்றி எசா 51:11ல்

ஆண்டவரால் மீட்கப்பட்டோர் திரும்பி வருவர்.
மகிழ்ந்து பாடிக்கொண்டே சீயோனுக்கு வருவர்.
முடிவில்லா மகிழ்ச்சி அவர்கள் தலைமேல் தங்கும்
அக்களிப்பும் அகமகிழ்ச்சியும் அவர்கள் அடைவர்.
துயரமும் பெருமூச்சும் ஒழிந்து போகும்

"உங்களுக்கு ஆறுதல் வழங்குபவர் நான் தானே" என எமக்காக உயிரைக்கொடுத்து எம்மை எல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கும் இறைவன் கூறுகிறார்.

இயேசு உயிர் பெற்று எழுந்த நாள் அவரை விசுவசிப்போருக்கு பெரும் திருவிழா நாள்.
அவரை விசுவசியாதவர்களுக்கு சாதாரண விழாதான்.

திருமதி. R.M.M கிறிஸ்ரோப்பர், நீர்கொழும்பு

## திருப்பாலத்துவ பாடல்கள் இறுவெட்டு வெளியீடு





- திருப்பாலத்துவ சபை சிறுவர்களே, ஊக்குவிப்பாளர்களே!
- திருப்பாலத்துவ சபைப் பாடல் இறுவெட்டில் (CD) உங்கள் கைவண்ணத்தில் உருவான பாடல்களும் இடம்பெற வேண்டும்?
- உங்கள் ஊக்குவிப்பாளர்களோடு இணைந்து திருப்பாலத்துவ சபை தொடர்பான கருத்துக்கள் அடங்கிய பாடல்களை எழுதிக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
- தரமான பாடல்கள் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு உங்களது பெயர்களின் உள்ளடக்கத்துடன் இறுவெட்டு (CD) வெளியிடப்படவிருக்கிறது.
- அத்துடன் சிறந்த குரல் வளம் உள்ள திருப்பாலத்துவ சிறுவர்கள் தங்கள் பெயர், முகவரி, தொடர்பிலக்கம் போன்றவைகளை தெளிவாக எழுதி உங்கள் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனருக்கு அனுப்பி வையுங்கள்.
- எதிர்வரும் வைகாசி 31ம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு உங்கள் பாடல்களை அனுப்பி வையுங்கள்.

### பாடல்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது
தேசிய இயக்குனர்,
பாப்பிறை மறைபரப்புச் சபைகள்,
இல 19, பல்கம் இடம்
கொழும்பு -8

Rev. Fr. Reginald Saparamadu
National Director,
Pontifical Mission Societies,
No 19 Balcombe Place,
Colombo -8

# "இறைமகனே உயிர்த்தெழுந்து வாரும்..."



யோர்தான்
நதி தீரத்தில்
இஸ்ராயேல் நாட்டில்
பாஸ்காப் பண்டிகை!
இல்லம் தோறும் மகிழ்ச்சி...
இரவில் விருந்து...
யேசுவுக்கு அது
இறுதி விருந்தானதே!

மெசியாவே
தங்களின்
வருகையின்
அர்த்தமென்ன
பாவத்தின் மன்னிப்பா?
ஆன்மாவின் விடுதலையா?

இந்த உலகத்தில்
எந்த ஒரு நீதிபதியும்
சரியான தீர்ப்பை
வளங்கமாட்டான்
என்பதற்கு நீர்
சாட்சியமாய் இருந்தீ(ர்)ரா?

நசரேத்து ஊர்
யேசுவின் மேல்
பிழை அறியாபிலாத்தும்
கைகழுவி சுத்தமானான்
பொய்யான உலகமிது ஐயனே!

கன்னத்தில் முத்தமிட்டு
கால் கழுவிப் பாஸ்கா செய்தாரை
காட்டிக் கொடுக்கும் கயமைக்கு
மித்திரனே சாட்சிய மாவான்
என்பதற்கு சாட்சியமானதே
உம்முடைய வரவு

குருவை வஞ்சிக்கும்
சிஷ்யனும் ஆசிரியரை
மும்முறை மறுதலிக்கும்
தலைமை மாணவனும்
நீரே நிதர்சன மானீர்!

இரத்தம்
இறுக்கமானால் போதாது
இரக்கமானதாகவும்
இருக்க சாட்சியமானீர்!

பிதாவே நீர்
பிரகண்டமான
சிலுவையை அதற்காகவா
சுமந்து புனிதமாக்கினீர்
உமது புனித இரத்தத்தால்
கொலைக் கருவியும்
புனிதமானதே!
பூசிக்கும் பேறுபெற்றதே!!

மரணத்தில் இருந்து
விழித்தெழுந்து நீர்
மரணம் முடிவானதல்ல
வென எமக்கருள் சுரந்தீர்!

மரித்தல் என்பது
இருப்பதால் தானே
உயிர்த்தல் என்பது
உயிர்வடைகிறது -தேவனே
உயிர்த்தெழுந்து வாரும்!
காத்திருப்போம்... நாம்...
உலகம் உயிர்த்தெழ...

"மண்டைதீவு மகிழ்நன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிபந்தனை அற்ற அன்பு

"உன் மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக." (மத்தேயு 22:39)

இயேசுவின் உயிர்ப்பு விழாவை கொண்டாடும் நாம் ஒவ்வொருவரும் எம் அயலவர் மீதும், நண்பர்கள்மீதும், எமது பெற்றோர்கள்மீதும் நிபந்தனை அற்ற அன்பு கொள்ள வேண்டும்.

இந்தியாவில் காஸ்மீர் எனும் இடம் மலைகளும், காடுகளும் நிறைந்த இடம். அங்கே பல குடிகள் வாழ்ந்து வந்தனர். அங்கே அவர்களின் பழக்க வழக்கமாக அவர்களின் ஊரில் உள்ள முதியவர்களை அல்லது பெற்றோர்களை மிக உயரமான மலை பிரதேசங்களில் கைவிட்டு விட்டு வருவார்களாம். இப்படி ஒரு நாள் ஒரு இளைஞன் தனது வயது முதிர்ந்த அன்னையை தூக்கிச் சென்று மலையில் கைவிட்டு வர, தாயை தூக்கி கொண்டு காடுகளைத் தாண்டி மலையின் உச்சிக்கு செல்லும் நோக்குடன் விரைந்து நடந்தான். அப்போது அவனது தாய் அவன் தன்னைக் கொண்டு செல்லும் பாதையில் உள்ள சிறிய மரக்கிளைகளை முறித்து முறித்துசென்றாள். கடைசியில் இவர்கள் மலையை அடைந்ததும் இவனது தாய், "மகனே இக்காடு பொல்லாத காடு எனவே நீ கவனமாகச் செல். வந்த பாதையினாலேயே திரும்பிசெல். நாம் வந்த பாதையில் சிறிய மரக்கிளைகளை முறித்து முறித்து விட்டிருக்கின்றேன். எனவே நீ கவனமாகப் போ" என கூறினாள் அந்தத் தாய். உடனே அந்த இளைஞன் தனது அன்னையின் உடைய நிபந்தனை அற்ற அன்பை உணர்ந்தவனாக மீண்டும் தாயை அனைத்து தூக்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

எங்கு ஒரு நிபந்தனை அற்ற அன்பும் உண்மையான மனஸ்தாபமும் ஏற்படுகின்றதோ அங்கே இறைவனது ஆசிரும் அருளும் நிறைவாகக் காணப்படும்.

"தன்(ம்) நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை." (யோவான் 15:13)

ஒளி இருக்கின்ற இடத்தில் இருள் இருக்காது. அதுபோல அன்பு, அதாவது நிபந்தனை அற்ற அன்பு இருக்கின்ற ஒரு இடத்தில் சந்தேகம் சிறிதேனும் அணுகமுடியாது. ஆனால் இன்றைய குடும்பங்கள் அன்பு இன்றி சீர்குலைந்த நிலையில் காணப்படுகின்றன.

திருச்சட்டத்தின்படி மனைவி கணவன் மீதும் கணவன் மனைவி மீதும் நிபந்தனை அற்ற அன்பு கொண்டவர்களாக இருக்கவேண்டும். அதேபோல் பிள்ளைகள் மீது பெற்றோரும் பெற்றோர்கள் மீது பிள்ளைகளும் உண்மையான அன்பு கொண்டிருத்தல் வேண்டும்.

ஆனால் இன்றைய சமூகத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளைக் கைவிடுதலும் பிள்ளைகள்பெற்றோரைக் கைவிடுதல்போன்ற செயற்பாடுகளில் மனிதநேயம் அற்ற பண்பாடு உருவாகிக் கொண்டு செல்கின்றது.

"நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது. (1கொரி 13:13)

இன்றைய நவீன கலாசாரத்தின் விளைவாக அன்பிற்குப் பணமே சிறந்த உரமாக மாறிவிட்டது. பணம் இருந்தால்தான் நண்பன் பணம் இல்லாவிட்டால் அவன் யாரோ? நான் யாரோ? என மாற்றம் அடைந்து விட்டது.

இன்றைய சினிமாக் கலாசாரத்தினுள் மூழ்கி சிறுவர்கள் முதல் பெரியோர் வரை அனைவரும் சினிமாவின் மாய வலையினுள் சிக்கி, அந்த மாயவலையில் இருந்து மீள முடியாது தள்ளாடுகின்றார்கள். இன்று சமூகங்களில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளை, கடத்தல், பெண்களுக்கெதிரான அநீதி, ஊழல் போன்றவற்றுக்கு சினிமாவே மறைமுகமாக நின்று துணை புரிகின்றது.

பென்சிலைப் பிடிக்க வேண்டிய சிறுவன் இன்று சிகரேட்டைப் பிடிக்கின்றான். சிரித்து மகிழ வேண்டிய குழந்தைகள் இன்று கருவிலேயே கல்லறை காண்கின்றன இவையே நவீன மயமாக்கலின் பெரிய விளைவு.

மலருகின்ற யேசுவின் உயிர்ப்போடு எம் ஒவ்வொருவருடைய மனங்களும் உண்மையான மனமாற்றத்தின் ஊடாக புதுப்பொலிவு அடைய வேண்டும். இதையே இயேசுக் கிறிஸ்து விரும்புகின்றார். "உங்கள்உடையைக் கிழிக்க வேண்டாம். மாறாக உங்கள் உள்ளத்தைக்கிழித்துக் கொண்டுஎன்னிடம்வாருங்கள்." என அழைக்கின்றார் எம் உயிர்த்த இயேசு. எனவே நாம் ஒவ்வொருவரும் அயலவர்கள் மீதும், முக்கியமாக நண்பர்கள் மீதும் நிபந்தனை அற்ற அன்பு கொண்டவர்களாக பாஸ்கா காலத்தில் பயணிக்க முயற்சி செய்வோம்.

"இறைவாக்குரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும்
மறைபொருள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும்
அறிவெல்லாம் பெற்றிருப்பினும் மலைகளை இடம் பெயரச்
செய்யும் அளவிற்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும்
என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை."
(1கொரி 13:2)

R.D.அன்ரனி அசிசி
புனித மடுத்தீனார் குருமடம்.



## பூமியில் உயிர்த்த புண்ணியப் பூவே

பூமியில் உயிர்த்த புண்ணியப் பூவே!
ஆவியின் ஒளியே! ஆசிகள் தாரும்

அற்புத வேந்தரின் அதிசய உத்தானம்
நிர்க்கதி வாழ்வில் நிம்மதி ஊற்றும்

அன்பும் ஆசியும் அருளும் தீபமே!
வன்பகை விலக்கி வைப்பீர் சுவாமி!

அருட்பணி ஊற்றுக்கள் அவனியை ஆதரிக்க
திருக்கர ஆசியால் திருவுளம் பொழியும்

விழிப்புணர்வு வீசிவந்த விண்கதிர்ச் சுடரே
அழியாப் பேரின்பம் அடையவழி விரியும்

சாதனை புரியும் சரித்திர நாயகா!
வேதனைச் சிறையில் விடுதலை வீசுவீர்

நீர்நடந்த வழிகளில் அடிவைத்து நாம்நடக்க
ஊருலகப் பூங்கதிரே! நேர்மைவளம் தாரும்

அன்புதிரும் செங்கரமே! ஆன்மீக ஔடதமே!
இன்பமே! எம்மில் இலங்கிட வாரும்

ஆதியும் அந்தமும் அழிவும் அற்றதோர்
நீதிநெறி சமாதானம் நின்றிலங்க அருளூற்றும்

நேர்மைநீதி நிர்வாகம் நீடித்து நிலைக்க
ஊருலகப் பேரொளியே! உள்ளத்தில் வருவீர்

ஞா. அரியமலர், மிருசுவில்.

# அடியற்றுப் போனவர்க்கு விடிவைக் கொடுத்த இயேசுவின் உயிர்ப்பு



"சீடர்கள் சென்று நகரை அடைந்து, தங்களுக்கு அவர் சொல்லியவாறே அனைத்தையும் கண்டு பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள்." (லூக் 14:16)

"ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்." (யோவா 13:14) எனக் கூறிய இயேசு புதிய பாஸ்காவை ஏற்படுத்தித் தந்தார்.

பழைய பாஸ்காவிலே இஸ்ரயேலர் துன்பங்களை அனுபவித்ததன் விளைவாக இறைவன் அவர்களுக்கு இனவிடுதலையைக் கொடுத்தார். ஆனால் இந்தப் புதிய பாஸ்காவில் அந்த இறைவனே, மக்களால் துன்பதுயரங்களுக்கு ஏன் சாவுக்கே ஆளானார். இதன் விளைவாக முழுமனிதமே விடுதலை பெற்றது. புதிய பாஸ்காவில் பாஸ்காச் செம்மறியாக இயேசுக்கிறிஸ்துவே விளங்குகின்றார்.

'இயேசு தம்மிடம் வருவதைக்கண்ட யோவான், இதா! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்' என்றார். (யோவா 9:29)

'ஆயனை அடிப்பேன் மந்தைகள் சிதறுண்டு போகும், என்று மறைநூலில் எழுதப்பட்டது, போன்று இயேசு அடித்து நொடுக்கப்பட்டு ஆடுகள் நாம் வாழ்வு பெறும் பொருட்டு சாவைத் தழுவினார். இறந்தவர் அப்படியே இருந்து விடவில்லை. மடியும்போது விதையாகத்தானே மடிந்தார். விதை மடிவது மரமாகத்தானே. இயேசு மீண்டும் உயிர்பெற்றார்.

'கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்.' (யோவா 12:24)

இயேசுவின் உயிர்ப்பை நற்செய்தியாளர்கள் பலவாறு விபரிக்கிறார்கள். ஓய்வு நாளுக்குப் பின் வாரத்தின் முதல்நாள் விடியற்காலையில் மகதலா மரியாவும் வேறுசில பெண்களும் கல்லறைக்குச் செல்கிறார்கள். அவர்கள் மனதிலே குழப்பம். தம் மீட்பரைக் கொன்று விட்டனர். அந்த யூதர்கள் இயேசுவின் சீடர்களாகிய எங்களையும் பிடித்து என்ன செய்வார்களோ! என்று அச்சத்தோடும் ஏக்கத்தோடும் தங்களது எதிர்கால வாழ்க்கையைப்பற்றி யோசித்துக் கொண்டு சென்றவர்களுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி. அது என்னவென்றால், கல்லறையை மூடியிருந்த பெரிய கல் அகற்றப்பட்டிருந்தது. இது ஏன்? எப்படி? யாரால் நிகழ்ந்தது?

இவ்வாறு இயேசுவின் உயிர்ப்பு இடிமேல் இடிவிழுந்து அடியற்றுப் போய் இருந்தவர்களுக்கு விடிவைக் கொடுத்தது. பலதரப்பட்டவர்களுக்கு இயேசுவின் புதிய பாஸ்கா இருளிலிருந்து ஒளிக்கு வர சிந்தையில் தெளிவைக் கொடுத்தது. ஆனால் பழைய பாஸ்காவிலே எகிப்தியர்களின் பெரும் அழிவைப் போன்று, எகிப்தியர்கள் ஆண்டவருக்கு அஞ்சி நடுங்கியதைப் போன்று இப்புதிய பாஸ்காவிலும் அது நடக்காமல் இல்லை. சாவுக்கே சாவு மணி அடிக்கப்பட்டது. அவரைப் புதைத்து விட்டதாக பெருமையடித்துக் கொண்டு மார்பு தட்டியவர்கள் அனைவரும் திகிலுற அவரோ புதையலாய் புறப்பட்டார். அவரது பூத உடல் மண்ணோடு மண்ணாகப் போகும் என்று நினைத்தனர். அவரோ தூங்கிய புயலாகப் புறப்பட்டார். இயேசுவின் இந்தப் பாஸ்கா மறைபொருளால் பாவப்பட்ட மனித இனம் புழுதி துடைக்கப்பட்டு புனிதம் அடைகிறது.

ஆதாம் வழியாக இவ்வுலகிற்குள் சாவு நுழைந்தது போல புதிய ஆதாம் இயேசுக்கிறிஸ்து வழியாக வாழ்வு வந்தது. நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின்கீழ் மனிதரிடையே இவரது பெயரின்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை.

'உயிருள்ள கல்லாகிய அவரை அணுகுங்கள். மனிதரால் உதறித்தள்ளப்பட்டதாயினும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட உயர்மதிப்புள்ள கல் அதுவே" (1பேதுரு 2:4)

ஆகவே இந்த அர்ப்பண ஆண்டிலே பயணிக்கும் நாம் திருமுழுக்கின் மூலம் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ விசுவாசத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து இவ்வுலகில் கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு சாட்சியம் பகரும் நல்ல தூதுவர்களாக மாறுவோம்.


"ஆட்டுக்குட்டியின் திருமணவிழா வந்து விட்டது. மணமகளும் திருமண விழாவிற்கு ஆயத்தமாய் இருக்கிறாள். எனவே மகிழ்வோம் வாருங்கள்." (தி.வெ 19:7)

ஸ். ஸ்ரீபன்ராஜ்
புனித மடுத்தீனார் குருமடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரத்த நிறத்தில் ஒரு ...



ஜெயந்தி மாமி சொல்லிக்கொண்டிருப்பது, முற்றத்து மாறாயிலுப்பை மரத்தடித் தென்னங்குத்தியில் அமர்ந்திருக்கிற எனக்குக் கேட்கிறது. "பாதர், இத நீங்க கொண்டு போங்கோ, இத வீட்ட வைச்சிருக்கக் கூடாது." பங்குத்தந்தை அதை கையில் வாங்கிக் கொண்டு மாமியை வியப்போடு பார்க்கிறார். அப்போது தட்டிலே தேனீரையும் உதடு முழுக்க புன்னகையையும் சுமந்து வந்த மாமியின் இரண்டாவது மகள் நித்தியா, "ஓம். பாதர் இது அப்பா வெளிநாட்டில இருந்து வரக்கே கொண்டு வந்தவர். வீட்டுச் சுவரில கொழுவச் சொன்னவர். நாங்கள் கொழுவத்தான் ஆணியும் அடிச்சிற்றம், அப்பதான் வதனாப் பெரியம்மா வந்து சொன்னவா, இது வீட்டில கிடந்தா துன்பமும் கஷ்ரமும் தான் வருமாம். தங்கட வீட்டையும் இப்படித் தான் ஒருக்கா நடந்ததாம். அதுக்குப்பிறகு அத சுவாமிற்ற குடுத்திட்டாவாம்." என்று சொல்லி துன்பம் தொலைந்தது என்ற நிறைவோடு சிரிக்கிறாள். பங்குத் தந்தை தன் கையில் திணிக்கப்பட்ட, சிலுவையில் அறையுண்ட இயேசுவின் திருச் சொரூபத்தைப் பார்க்கிறார். அனைவராலும் நிரா கரிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்ட இயேசு இரத்தம் ஒழுகும் உடலோடு தலை கவிழ்ந்து மரணித்துக் கிடக்கிறார்.

யாருக்கும் சிலுவைகளைப் பிடிப்பதில்லை. சிலுவைகள் இரத்தமும் கண்ணீரும் வலிகளும் அவமானங்களும் மரண ஓலங்களும் நிறைந்தவை. துன்பம் என்ற வார்த்தையைக் கேட்டாலே தெறித்து ஓடுகிறோம். உயிர்ப்பு ஞாயிறுகளைப் போல, மரண வெள்ளிக் கிழமைகளை எம்மால் நேசிக்க முடிவதில்லை. ஆனால் இரத்த வாடை அடிக்கும் கல்வாரிகளையும் மரணம் மண்டிக்கிடக்கும் கல்லறைகளையும் கடந்து வராவிட்டால் உயிர்ப்புக்கள் சாத்தியமில்லையே.

உயிர்ப்பு ஞாயிறோடு தூக்கி எறியப்பட வேண்டியவையல்ல சிலுவைகள். 'என்னைப் பின்பற்ற விரும்பும் எவனும் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றட்டும். சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றாத எவனும் என் சீடனாய் இருக்கமுடியாது கிறிஸ்தவம் ஒரு ஆபத்து. அது சாவைச் சட்டைப்பையில் சுமந்து கொண்டு நடக்கிற பயணம்.

நாங்கள் முட்கள் இல்லாத றோஜாச் செடிகள் கேட்கிறோம். இடிகள் இல்லாத வானம் கேட்கிறோம். கல்வாரிகள் இல்லாத இயேசுவைக் கேட்கிறோம். இறப்புக்கள் இல்லாத உயிர்ப்புக்கள் கேட்கிறோம். ஒரு கரிய இரவைக் கடக்க சம்மதிப்பதால்தானே இன்னொரு சூரிய உதயம் பூமிக்குக் கிடைக்கிறது. ஐயோ பிரசவ வலிகள், வேண்டவே வேண்டாம். ஆனால் மழலையின் சிரிப்புச் சத்தம் வீட்டில் சின்னக் குயிலோசையாய் நிறைய வேண்டும். எப்படி முடியும்?

எங்களால் காயங்களை நேசிக்க முடிவதில்லை. காயப்பட எம்மை அனுமதித்தால் கடவுளையும் நேசிக்க முடிவதில்லை. புரியவில்லையா? நாம் கைதொழும் தெய்வமே ஒரு காயப்பட்ட கடவுள்தானே!

ஓடங்கள் கரையில் கட்டப்படுவது பாதுகாப்பானதுதான். ஆனால் ஓடங்கள் செய்யப்படுவதன் நோக்கம் அதுவல்லவே. அதோ தூரத்தே தெரிகிறது எம் கனவு தேசம். அதோ நீண்டு வளைந்து நெருஞ்சி முட்கள் முளைத்துக் கிடக்கிறது. நாம் நடந்து போகவேண்டி ஒடுக்கமான பாதை. இதுதான் மீட்பின் பாதை. இதுதான் உயிர்ப்புகளைத் தந்த சிலுவைப்பாதை. துணிந்து நடவுங்கள் அதோ இரத்த நிறத்தில் தெரிகிறது இயேசு சுமந்துபோன மீட்பின் சிலுவை. அவற்றின் நிறம் சிவப்போ?

சி. அஜந்தன்
புனித சவேரியார் குருமடம்



## உத்தமரின் உத்தானம்



சுயநலம் கலந்த அன்பும்
சுகமில்லாத மானிட வாழ்வும்
கவலைகள் நிறைந்த உறவுகளும்
களிப்பே இல்லாத வரவுகளும்
வேஷங்கள் கொண்டிங்கு உலாவரும்
வேறு வேறான முகங்களும்
பாசம் என்னவென்று காணப்
பாரினில் ஏங்கியே தவிக்கின்றேன்.
உண்மையான அன்பு உலகினில்
உயர்ந்தது என்று நினைத்திடினும்
அதனைக் காணாது ஏங்குகின்றேன்
உடலை வருத்தி உழைத்தாலும்
உள்ளமது அன்பிற்காய் ஏங்குகின்றது
உயர்ந்த சேவை செய்தாலும்
உள்ளத்தால் நானும் பெண்தானே
உத்தமரே என் இரட்சகரே
உயர்ந்த உமது உத்தானம்
உதயமாக்கட்டும் என் வாழ்வை

ஜெ. றமணி
சில்லாலை



## கிறிஸ்துவோடு உயிர்த்தெழுவோம்

பாருலகோரைப் பரலோகம் சேர்க்க
பாரமரச் சிலுவையை தோளிலேற்று
பாதைகள் தோறும் பாதங்கள் பதிய
பயணமானார் யேசு கல்வாரி நோக்கி

மனித இன மீட்புக்கு விலையாக
தன் உயிரைப் பலியாக்கி
கல்லறையில் புதையுண்டு
மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தீர்

காலத்தால் அழியாத கர்த்தரை
இன்னும் தேடி அலைகின்றனர்
கல்லறைக்குள் தினமும்
வெற்றுக்கல்லறை என்பதை அறியாமலே

மரணத்தை வென்று மானிடர்க்கு
புதுவாழ்வு புலர்ந்திட வழியானீர்
கல்லறைகளை வெறுமையாக்கி நாமும்
உம்மோடிணைந்து உயிர் பெற்றெழுவோம்.

சேரூபன் ஷெர்வின், மல்வம்.

# புதைந்து கிடக்கும் வாழ்வை புரட்டி எடுப்போமா?

'இறந்தவர் உயிர்த்தெழுதல்' என்பது பற்றிக்கேட்டதும் சிலர் அவரைக் கிண்டல் செய்தனர். மற்றவர்கள், "இதைப்பற்றி நீர் மீண்டும் வந்து பேசும்; கேட்போம்" என்றார்கள்" (தி.ப 17:32) இது புனித பவுல் ஏதென்ஸ் நகர மக்களுக்கு இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சியம் அளித்தபோது அவருக்குக் கிடைத்த பதில். அங்கே சிலர் ஏளனம் செய்கின்றார்கள், சிலர் கதை கேட்பதில் ஆர்வம் கொள்கின்றார்கள்.

இன்று நாம் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு அவரின் உயிர்ப்பிலும் விசுவாசம் கொள்கின்றோம். ஆனால் செயலிலே நாம் சில வேளைகளில் இந்த ஏதென்ஸ் நகர மக்களைப் போன்று வாழ்கின்றோம். ஏனெனில் அவர்கள் அறியாத தெய்வம் இயேசுக் கிறிஸ்துவென புனித பவுல் விளக்கிக் கூறியும்பலமெய்யியல்அறிவாளிகளைக்கொண்ட அந்த சமூகம் இயேசு ஆண்டவரின் உயிர்ப்பிலே பங்குகொள்ள மறுத்தது; இருந்தும் சிலர் நம்பிக்கை கொண்டார்கள்.

நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்வதிலே பெருமை கொள்கின்றோம். ஆனால் இயேசுவின் உயிர்ப்புக்கு அவரின் படிப்பினைகளுக்கு சாட்சியளிக்காமல் எமது வாழ்வினால் ஒரு கிறிஸ்தவனாக காட்ட முடியாதவர்களாக பொய்யான போலிக் கிறிஸ்தவர்களாக வாழுகின்றோம். எவ்வாறெனில் எம்முடைய நாளாந்த வாழ்விலே எமது சிலுவைகளைச் சுமக்க மறுக்கிறோம்; எம்மையே நாம் மறுக்க முடியாத சுயநலவாதிகளாக வாழ்கின்றோம்.

உலகத்தின் போக்கிற்கு எம்மை கையளித்து எம்முடைய வாழ்வினை தொழில்நுட்பத்திற்குள்ளும், நுகர்வுக் கலாசாரத்திற்குள்ளும், சினிமா உலகிற்குள்ளும், தொடர்நாடக புதுமை வாழ்விற்குள்ளும், பாலியல் இச்சைகளுக்குள்ளும் புதைத்து, இவற்றிற்குள்ளான ஒரு வாழ்வு வாழ நாம் துடிதுடிக்கின்றோம். இதுவே எம் அனைவரது வாழ்வின் பயணப்பாதையாக இருக்கின்றது.

ஆனால் இயேசு சொல்லுகின்ற பாதை ஒடுங்கியது, கடினமானது, இதைப் போன்று சுகபோகங்களைக் கொண்டதல்ல, மாறாக தன்னலமறுப்பையும், நாளாந்த சிலுவைகளையும், பிறரன்பு செயல்களையும் கொண்ட கரடுமுரடான பாதை.

இந்தப்பாதையை இயேசு வெறுமனே வழிகாட்டி விடவில்லை மாறாக தான் தனது வாழ்வால் இந்தப் பாதையிலே முன் வழி நடந்து வாழ்ந்து காட்டினார். அதாவது துன்பம் அறியாத இறைமகன் மனித அவதாரத்தின் உச்சக்கட்டத்திலே உடலியல், உளவியல் துன்பத்தை அனுபவித்தார். ஆனால் சுமை குறைக்கவோ, சுமைதாங்கவோ இயேசு அங்கே இறைத்தன்மையைப் பயன்படுத்த விரும்பவில்லை. உண்மையான முழுமனிதனாக நீயும் நானும் கொண்டுள்ள அதே உணர்வுகளோடு உனக்காகவும் எனக்காகவும் ஏளனமாய் பார்க்கப்பட்ட சிலுவையிலே தன்னுடைய இரத்தாறுகளை வழிய விட்டார். மரிமகனாக மனிதனாக பாடுகளைப் பட்டதனால் தான் தந்தையே என் இறைவர் என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் என



தனது வலியின் வேதனையைப் பரமனிடம் வெளிக்கொணர்ந்தார்.

ஆக நாளாந்த வாழ்விலே ஒரு கிறிஸ்தவனாக வாழ முடியாத நாம் "இஸ்லாமிய அரசு" (IS) என்கின்ற தீவிரவாதம் எம் முன்னிலையில் வந்தால் நாம் கிறிஸ்துவிற்கு சாட்சியமாவோமா? அல்லது அவவிசுவாசிகளாக காட்டிக் கொள்ளுவோமா? ஏனெனில் நாம் சுயநலக்காரர், நுகர்வதில் வல்லவர்கள், "நான் அல்லது நாம்" என்பதில் முற்போக்குள்ளவர்கள். இந்தத் தீவிரவாதிகளிடம் தனது இரண்டு சகோதரர்கள் பிடிபட்டு இயேசுவின் பெயரால் அவர்கள் கொல்லப்பட்டதை இட்டு சந்தோசம் அளிப்பதாக ஒரு பாதிக்கப்பட்ட சகோதரன் சாட்சியமளித்துள்ளான். அதே போன்று தானும் வேதசாட்சியாக மரிப்பதில் பெருமை கொள்கின்றான். இந்தச் சிறுவனிடம் இருக்கின்ற விசவாசம் உன்னிடமும் என்னிடமும் இருக்கின்றதா?

ஆகவே நாளாந்த வாழ்விலே சுயநல மற்று மனித நேயத்தை எம் வாழ்வாக்கி, எமது தியாகங்களிலே அயலவரின் முகமலர்வுகண்டு, எமது அன்றாட துன்பங்களை ஏற்று கிறிஸ்துவின் உயிர்ப்பு சாட்சிய மளிக்க போலிக் கிறிஸ்தவனாகவன்று உண்மைக் கிறிஸ்தவனாக வாழுவோமா?

ச. யூட் கெமில்டன்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டு

## சிறப்பு யூபிலி ஆண்டாக "இரக்கத்தின் ஆண்டு" திருத்தந்தையால் அறிவிப்பு



கத்தோலிக்கத் திரு அவையின் பணி, இரக்கம் என்ற பண்புக்குச் சாட்சியாகத் திகழ்வது என்பதைக் கோடிட்டுக் காட்டும் விதமாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இரக்கத்தின் புனித ஆண்டு என்ற சிறப்பு ஜூபிலி ஆண்டை அறிவித்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது தலைமைப்பணியின் 2வது ஆண்டு நிறைவு நாளான மார்ச் 13ம் திகதியன்று வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் தலைமை யேற்று நடத்திய தவக்கால பாவமன்னிப்பு திருவழிபாட்டில் மறையுரையாற்றியபோது இந்த ஜூபிலி புனித ஆண்டை அறிவித்தார்.

"திரு அவை தனது மறைப்பணியில், இரக்கம் என்ற பண்புக்கு எவ்வாறு தெளிவான சாட்சியாகத்திகழ்வது என்று அடிக்கடி நினைத்துப் பார்த்தேன், அதனால் ஒரு சிறப்புப் புனித ஆண்டை அறிவிப்பதற்குத் தீர்மானித்தேன், இந்தப் புனித ஆண்டு 2015ம் ஆண்டு டிசம்பர் 8ம் திகதி முதல், 2016ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதிவரை சிறப்பிக்கப்படும்" எனக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## புனித ஆண்டு பற்றிய தகவல்கள்

வருகிற டிசம்பர் 8ம் திகதி அமல அன்னை பெருவிழாவன்று வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்திலுள்ள புனிதக் கதவு திறக்கப்படுவதோடு இந்த இரக்கத்தின் ஜூபிலி ஆண்டு ஆரம்பிக்கும் என்று, புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை அறிவித்துள்ளது. அதே நாளில் உரோம் நகரிலுள்ள நான்கு திருத்தந்தை பசிலிக்காக்களின் புனிதக் கதவுகளும் திறக்கப்படும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்துள்ள இந்த சிறப்பு ஜூபிலி ஆண்டின் நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றுள்ள இத்திருப்பீட அவை, இரக்கத்தின் புனித ஆண்டு குறித்த மேலும் பல தகவல்களையும் வெளியிட்டுள்ளது.

1965ம் ஆண்டு டிசம்பர் 8ம் தேதி இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் நிறைவுற்றதன் ஐம்பதாம் ஆண்டு நிறைவு நாளன்று தொடங்கும் இந்த ஜூபிலி ஆண்டு, அச்சங்கத்தில் தொடங்கப்பட்ட பணிகள் திருஅவையில் தொடர்ந்து நடைபெற உந்துதலாக உள்ளது என்றும் இத்திருப்பீட அவை கூறியுள்ளது.

கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவுக்கு அடுத்து வரும் ஞாயிறன்று, அதாவது இறை இரக்க ஞாயிறன்று, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காவின் புனிதக் கதவின் முன்னால் இந்தப் புனித ஆண்டு பற்றிய திருத்தந்தையின் ஆணை பொதுப்படையாக, ஆடம்பரமாக, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். 2016ம் ஆண்டு நவம்பர் 20ம் தேதி கிறிஸ்து அரசர் பெருவிழா வன்று இந்த ஆண்டு நிறைவடையும்.

இந்த ஜூபிலி ஆண்டில், இரக்கத்தின் நற்செய்தியாளர் எனக் குறிப்பிடப்படும் லூக்கா நற்செய்தியிலிருந்து ஞாயிறு வாசகங்கள் எடுக்கப்படும் என்றும் புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை அறிவித்துள்ளது.

## திரு அவையில் ஜூபிலி ஆண்டுகள்

பொதுவாக, கத்தோலிக்க திரு அவையில் இருபத்தைந்து (25) ஆண்டுகளுக்கு ஒருமுறை புனித ஜூபிலி ஆண்டு அறிவிக்கப்படுகிறது. அச்சமயத்தில் சிறப்பு வழிபாடுகளும் சிறப்புத் திருப்பயணங்களும் இடம்பெறும். மனமாற்றத்துக்கும் மனம் வருந்துதலுக்கும் சிறப்பாக அழைப்பு விடுக்கப்படும்.

அருளடையாளங்கள், குறிப்பாக, ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் கடவுளின் அருளை அனுபவிப்பதற்குச் சிறப்பு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

பழங்கால எபிரேய மரபுப்படி, இஸ்ராயேல் மக்கள் மத்தியில் சமத்துவத்தை நிலைநாட்டும் நோக்கத்தில்,தங்களின் சொத்துக்களை இழந்த குடும்பங்கள், ஏன் தங்களின் சுதந்திரத்தை இழந்தவர்கள் மீண்டும் அதனைப் பெறும் நோக்கத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜூபிலி ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது.

கத்தோலிக்க திரு அவையில் 1300ம் ஆண்டில், திருத்தந்தை 8ம் பொனிபாஸ் அவர்கள் புனித ஆண்டை அறிவித்தார். பின்னர், ஒவ்வொரு தலைமுறையும் தனது வாழ்நாளில் ஒருமுறையாவது ஜூபிலி ஆண்டின் பலன்களை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 1475ம் ஆண்டிலிருந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புனித ஜூபிலி ஆண்டு திரு அவையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை திரு அவையில் 26 ஜூபிலி ஆண்டுகள் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இறுதியாக இரண்டாயிரமாம் ஆண்டில் நடைபெற்றது. அரசியல் பிரச்சனைகள் காரணமாக 1800 மற்றும் 1850ம் ஆண்டுகளில் ஜூபிலி ஆண்டுகள் சிறப்பிக்கப்படவில்லை. இதுவரை இரண்டு சிறப்பு ஜூபிலி ஆண்டுகள் சிறப்பிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் மீட்பின் 1900மாம் ஆண்டையொட்டி, திருத்தந்தை 11ம் பயஸ் அவர்கள், 1933ம் ஆண்டிலும்,மீட்பின் 1950ம் ஆண்டையொட்டி, புனித திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்கள் 1983ம் ஆண்டிலும் சிறப்பு ஜூபிலி ஆண்டை அறிவித்தனர். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நிறைவுற்றதன் 50ம் ஆண்டையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மார்ச் 13, 2015 வெள்ளியன்று இரக்கத்தின் புனித ஆண்டு என்ற சிறப்பு ஜூபிலி ஆண்டை அறிவித்துள்ளார்.

## இரக்கத்தின் ஆண்டின் கருப்பொருள்

"உங்கள் வானகத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" (லூக்.6,36) என்ற விவிலிய திருச்சொற்கள், இந்த ஜூபிலி புனித ஆண்டின் கருப்பொருள் எனக் கூறிய திருத்தந்தை, இரக்கம் என்ற இந்தப் பண்பு ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்று பவர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்று புன்முறுவலோடு, மறையுரையில் கூறினார்.

இத்திருவழிபாட்டை நிறைவு செய்த பின்னர் வத்திக்கான் பசிலிக்காவில் அமர்ந்திருந்த ஓர் அருள்பணியாளரிடம் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றார் திருத்தந்தை பிரான்சிஸ். அதன் பின்னர் தானும் மற்றோர் இடத்தில் அமர்ந்து ஒப்புரவு அருளடையாளத்தை சிலருக்கு நிறைவேற்றினார்.

"இறையருளால் தொடப்பட்ட அனைவருக்கும் ஆயத்தின் கதவுகள் எப்போதும் அகலத் திறந்திருக்கின்றன, அவர்கள் நிச்சயமாக இறைவனின் மன்னிப்பைப் பெறலாம்" என்றும் கூறினார் திருத்தந்தை.

## இரக்கத்தின் ஆண்டின் அருட்சாதனம்

### ஒப்புரவு அருட்சாதனம் பற்றிக் குருக்களுக்கு திருத்தந்தை அறிவுரை

கத்தோலிக்க அருள் அடையாளங்களில் ஒப்புரவு அருள் அடையாளம் இறைவனின் கனிவுள்ள முகத்தைக் காட்டுவதால், இரக்கத்தின் அருட்சாதனமாக இருக்கிறது.

கடவுளின் மன்னிப்பை வழங்கும் ஒப்புரவு அருள் அடையாளத்தின் மூன்று அம்சங்களைத் திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார்.

ஒப்புரவு அருள் அடையாளம், இரக்கத்தைச் சொல்லித்தரும் ஒரு வழியாக உணரப்படுதல், இந்த அருள் அடையாளத்தைக் கொண்டாடும் வழிகளைக் கற்றுக் கொள்ளுதல் மற்றும் மறு உகை இயல்பை மையப் படுத்தும் ஒரு கண்ணோட்டத்துடன் இந்த அருள் அடையாளத்தை அணுகுதல் ஆகியவை திருத்தந்தை வலியுறுத்திய மூன்று அம்சங்கள்.

மன்னிப்பு வேண்டி வரும் மனிதரை, கேள்விகளால் சித்திரவதை செய்யும் ஒரு சந்திப்பாக இல்லாமல், நம்பிக்கையையும், மகிழ்வையும் தரும் ஒரு சந்திப்பாக ஒப்புரவு அருள் அடையாளம் அமையவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

பல ஆண்டுகள் பாவத்தின் பிடியில் வாழும் மனிதர்கள், இந்த அருள் அடையாளத்தில் கடவுளிடம் முழுவதும் சரண் அடையும் தருணத்தில், அருள் அடையாளத்தை வழங்கும் அருள் பணியாளர், அங்கு நிகழும் ஒப்புரவுப் புதுமைக்கு ஒரு சாட்சியாக மாற வேண்டும் என்று திருத்தந்தை எடுத்துரைத்தார்.

ஒப்புரவு அருள் அடையாளத்தை வழங்கும் அருள் பணியாளர், இறைவனின் இரக்கத்தைக் கொணரும் ஒரு வழி மட்டுமே என்ற மேலான உண்மையை, மறு உலகக் கண்ணோட்டத்தோடு நோக்கும் பக்குவம் பெறவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையின் மூன்றாம் பகுதியில் கூறினார்.

இறைவனின் இரக்கமும், நன்மைத் தனமும், உலகின் தீமைகள் அனைத்தையும் இறுதியில் வென்றுவிடும் என்ற நம்பிக்கையுடன் அருள் பணியாளர்கள் இந்த அருள் அடையாளத்தை வழங்குவதில் தாராள மனதுடன் பணியாற்ற வேண்டும் என்ற விண்ணப்பத்தோடு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையை நிறைவு செய்தார்.



சக்கோட்டையில் கடலுக்குள் நடந்த சிலுவைப்பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்மேல் துறவிகள் உலக அமைதிக்காகச் செபம்

கார்மேல்சபையைப்புனரமைத்த அவிலா நகர் புனித தெரேசா அவர்கள் பிறந்த 500ம் ஆண்டு நிறைவு கடந்த மார்ச் மாதம் 28ம் திகதியாகும். இதன் நினைவாக உலக அமைதியை மையப்படுத்தி கார்மேல் துறவு சபையினர் உலகளாவிய செப வழிபாடுகளை நடாத்துகிறார்கள். கடந்த மார்ச் மாதம் 26ம் திகதி நடைபெற்ற வழிபாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் இணைந்து செபித்தார்.

**(Yes..but...) "ஆம்... ஆனால்..." கிறிஸ்தவம் செல்லுபடியற்றது. விசுவாசத்திற்கு நாம் நிபந்தனை போடக் கூடாது.**
**மகிழ்ச்சி இல்லாத விசுவாசியாக இருப்பது கவலைக்குரிய விடயம். - திருத்தந்தை**

### விண்ணக மலர்வின்
### 90 வது நாள் | 6ம் வருட நினைவு
(40வது பிறந்த நாள்)





சுவாம்பிள்ளை பத்திநாதர்
மண்ணில் 17.01.1948
விண்ணில் 06.01.2015

வி. மேரிலூட்ஸ் (யஸ்மின்)
மண்ணில் 03.04.1975
விண்ணில் 18.05.2009

"என் நெஞ்சம் அமைதி பெற உம் திருமுன் வைத்துக் காத்தருளும்"

அன்பு மகளே,
அப்பாவை அழைத்துக் கொண்டாயோ
நீங்கள் எம்முடன் இல்லையென்பதை
எண்ணிப் பார்க்க முடியவில்லை.
எங்கள் உள்ளத்தில்
உங்களை வைத்து
கண்ணீர் அஞ்சலி செய்கின்றோம்.
இறைவன் இல்லத்தில் அமைதியாக
சாந்தி பெற - இறைவனிடம்
அனுதினமும் வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்

### 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு 18.03.1937
இறப்பு 01.04.2010

### திருமதி. மேரி யோசவ்வின் பாக்கியநாதர்
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவா. 11:25)


அன்புடன் நினைவுகூரும் கணவர் அ. பாக்கியநாதர்

| பிள்ளைகள் | மருமக்கள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|
| றெஜி | நிஜிதா | மேரி றியாங்கி |
| றொகான் | வதனி | ஜெறோம் |
| றதீஸ்குமார் | தயாளினி | ஆன் செரன், ஆன் ஷிரோனி |

மற்றும் உறவினர்கள் நண்பர்கள்

தகவல்: அ. பாக்கியநாதர் (கணவர்)
"மரியன்ஸ்", கல்லூரி வீதி, மானிப்பாய்.
T.P. 077 635 9240

### உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாய் ...



வாழ்வு என்னும் கொடையை
வளமாய்த் தந்தார் இறைவன்
வாழ்வை நிறைவாய் வாழ
வாஞ்சையோடு வந்தார் இயேசு

வார்த்தை வடிவில் இருந்தவர்
அன்பு மகனாய் அவதரித்தார்
வானவர் வாழ்த்திசைக்க
வையகம் மலர்ந்திட
அன்புக் கரத்தால்
அகிலத்தை அரவணைத்தார்

வாழ்வு தரும் வார்த்தையை
வல்லமையோடு போதித்தார்
வாழ்வு இழந்த மனிதருக்கு
வாழ்வின் வழி காட்டினார்

புதுமைகள் பல பாரினில் புரிந்து
புனிதராய் வாழ்ந்தார்
புண்ணிய நெறியில்
பரலோகம் செல்ல
புரட்சிகள் பல செய்தார்

சோதனை வேதனையிலும்
சாதனை படைத்திட்டார்
சோதிக்கும் சாத்தானையும்
சாதித்தே காட்டினார்

பாவம் சாபம் நீங்கிடவே
பாடுகள் பல பட்டார்
பாரில் வாழும் மனிதருக்காய்
பாச உயிரைக் கையளித்தார்

இறை தந்தையின் திருவுளம்
இகமதில் இனிதே நிறைவேற்றினார்
இன்னுயிர் தனை ஈந்து
இவ்வுலகை மீட்டெடுத்தார்.

கருவறையில் பத்து மாதம்
கன்னி வயிற்றில்
உறைவிடமானார்
கல்லறையில் மூன்று நாள்
காவிய நாயகன் துயில் கொண்டார்

சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில்
சாதனை வீரர் நடந்திட்டார்
சாத்தானின் சாவின் கொடுக்கினை
சரித்திரத்தில் முறியடித்தார்

உயிரின் இறைவன்
உண்மையில் உயிர்த்தார்
உன்னத தேவன்
உயிருடன் வாழ்கிறார்
உரத்து சொல்வோம்
உலகினர் கேட்டிட
உயிர்த்த இயேசுவின்
சாட்சியாய் வாழுவோம்

நம்பிக்கை கொண்டோர்
இறப்பினும் வாழ்வர்
நம்புவோம் இயேசுவின்
உயிருள்ள வார்த்தையை
நம்பிக்கை வேர்களை
இறைவனில் பதித்து
நல்லாசி பெற்றிடுவோம்
உயிர்த்த இயேசுவிடம்

அருட்பணி. மை. நிக்சன் கொலின்

**திருப்பாலத்துவச் சபைப் பிள்ளைகளே, ஊக்குவிப்பாளர்களே!**
**உங்களுக்கான ஒரு விளம்பரம் 11ம் பக்கத்தில்**

### 3ம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 28.04.1962
உதிர்வு 06.04.2012

இறைவனடி சேர்ந்த அமரர்
### திரு. டேவிற் விற்மன்ஜோஜ்

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன வேதனைகள் எதுவும் அவர்களைத்தீண்டாது."

மனைவி, பிள்ளைகள், தந்தை, தாய், சகோதரர்கள்
(மணற்காடு) (இத்தாலி பலர்மோ)

### விண்ணக வாழ்வில் 31ம் நாள் நினைவு அஞ்சலி



மண்ணில் 19.03.1950
விண்ணில் 22.02.2015

### அமரர் கிறிஸ்சோஸ்ரோம் யோசவ் (அன்ரன்)

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"
(தி.பா. 27:4)

32/8, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்

### விண்ணக வாழ்வின் நான்கு ஆண்டுகள் நினைவஞ்சலி



மண்ணுலகில் 07.11.1948
விண்ணுலகில் 21.03.2011

### நீற்றா ஞானதீபம் சுகந்தநாதன் (நிர்மலா)

ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
உங்கள் நினைவில் நாங்கள் உள்ளோம்
நான்கு வருடங்கள் என்ன நாற்பது
வருடம் கடந்தாலும் உங்களுடன்
வாழ்ந்தது பொற்காலமே...

19, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் திருநிலைப்படுத்தப்படும் 10 புதிய குருக்களை வாழ்த்துகிறோம்



எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவிருக்கும் பத்துப்பேரையும் படத்தில் காணலாம். (இடமிருந்து வலமாக மேல்வரி) ம. லியோன் றொகான் பீரிஸ், பேசாலை (கிளரீசியன் சபை), ச. யேசுதாசன், வஞ்சியன்குளம் (கிளரீசியன் சபை), ம. பற்றிக் பிரசாந்த், பறப்பான்கண்டல் (அ.ம.தி.), சீ. ஆல்ஸ்ரன் றோச், விடத்தல்தீவு (அ.ம.தி.), மற்றும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த யே. அமலராஜன் குரூஸ், தலைமன்னார், (இடமிருந்து வலமாக கீழ்வரி) பா. றொசான், இத்திக்கண்டல், இ. நீக்கிலஸ், உயிர்த்தராசன்குளம், நி. மேரி பெய்லன் குரூஸ், வங்காலை, பே. சார்ள்ஸ் தயாளன் கூஞ்ஞ, வங்காலை, ப. யோண் ஸ்ரனின் சோசை, வங்காலை.

## கிளரேசியன் சபையின் புதிய தலைவர்



கிளரேசியன் சபையின் ஜேர்மன் மாகாணத்திற்கான புதிய தலைவராக இலங்கை, கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்பணி. கலிஸ்ரஸ் யோசப் (CMF) அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் ஜேர்மன் மாகாணத்திற்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் என்பது பெருமைக்குரியதும் குறிப்பிடத்தக்கதுமாகும்.

அருட்தந்தையின் பணி சிறக்க மன்றாட்டுக்களையும் நல்லாசீரையும் கூறி நிற்கிறோம்.

தகவல்: S. யூட் பெகின் கொடுதோர் (CMF)




நெடுந்தீவு மரியாயின் சேனையினரின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் போது யாழ் மறைமாவட்ட இயக்குநர், பங்குத்தந்தையர் ஆகியோரோடு எடுக்கப்பட்ட படம்



மணற்காட்டிலுள்ள சுனாமி ஞாபகார்த்த உலக இரட்சகர் சிலை

உரும்பிராயில் மேடை யேற்றப்பட்ட சிலுவையின் அதிர்வுகள் திருப்பாடுகளின் காட்சியில் ஒரு கட்டம்



## தூய மரியன்னை பேராலயம் பரிசுத்தவார வழிபாட்டு நேர ஒழுங்குகள் 2015

| நாட்கள் | வழிபாடுகள் | நேரம் |
|---|---|---|
| குருத்து ஞாயிறு 29.03.2015 | திருப்பலிகள் | காலை 6.00 மணி<br>காலை 7.30 மணி<br>மாலை 4.30 மணி |
| பரிசுத்த வார திங்கள் 30.03.2015 | திரு எண்ணெய் மந்திரித்தல் | மாலை 4.30 மணி |
| பரிசுத்த வார வியாழன் 02.04.2015 | திருப்பலி<br>பொது ஆராதனை | மாலை 5.30 மணி<br>இரவு 9.30 மணி |
| பரிசுத்தவார வெள்ளி 03.04.2015 | சிலுவைப்பாதை வழிபாடு | காலை 6.30 மணி<br>மாலை 4.00 மணி |
| பரிசுத்தவார சனி 04.04.2015 | ஏழு வார்த்தைகள் தியானம்<br>திருவிழிப்பு வழிபாடு | காலை 6.30 மணி<br>இரவு 10.30 மணி |
| உயிர்த்த ஞாயிறு 05.04.2015 | முதல் திருப்பலி<br>இரண்டாம் திருப்பலி | காலை 5.45 மணி<br>காலை 7.15 மணி |



வளலாயிலுள்ள ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான விடுமுறை இல்லம் அமைந்திருந்த காணியில் தற்பொழுது எஞ்சியுள்ள தூய லூர்து அன்னை கெபி

## வாகைச்சுடர் நூல் வெளியீடு






திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்பணி. கலாநிதி N.M. சவிரிமுத்து அவர்களின் ஆக்கத்தில் உருவான வாகைச்சுடர் என்னும் நூல் கடந்த 25.03.2015 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளிடமிருந்து முதல் பிரதியை திருமதி தியடோசியா பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## ஈஸ்ரர் நல்வாழ்த்துக்கள்

பாதுகாவலனின் மதிப்புமிக்க அபிமான வாசகப் பெருமக்களுக்கு உயிர்த்த இயேசுவின் வல்லமையும் நிறைவான ஆசீர்வாதமும் நிறைந்த ஈஸ்ரர் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

- அதிபர், ஆசிரியர், பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2015ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.